பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

★ காஞ்சிபுரம்
★ பெனாரிஸ்
★ செவி தஞ்சூர்
★ பாட்வி
★ பட்டுவேஷ்டிகள்

மற்றும் சகலவிதமான
பிளஸ்வ் பீஸ் வகைகளுக்கும்

ராசி சில்க்ஸ்

நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூபா 3-50


மங்கள வைபவங்களுக்
கேற்ப உடுபுடவைகள்

ராசி சில்க்ஸ்

நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

சுடர் 5: பிரமோதூத ஞூ சித்திரை மீ 21 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால் பிறை 08 (04 - 05 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 77

## மட்டுநகர் மேதினப் பேரணியில் பவனி வந்த ஊர்திகளின் காட்சிகள்



## சாவகச்சேரியில் இன்று 100 பேர் விடுவிக்கப்படுவர்

யாழ்ப்பாணம், மே 4

விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் நூறுபேர் இன்று மாலை 4 மணிக்கு சாவகச்சேரியில் வைத்து விடுவிக்கப்பட இருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதி ஒருவர் இத்தகவலை தெரிவித்தார்.

### எரிபொருள் இல்லை

யாழ்ப்பாணம், மே 4

யாழ்நகரில் அனேக பெற்றோல் நிலையங்களில் நேற்று ''எரிபொருள் இல்லை'' என்ற அறிவிப்புப் பலகைகள் காணப்பட்டன. (ஒ)

# வரதர் நாடு திரும்பினால் சட்ட நடவடிக்கை!

## அரசு-ஈ.பி.ஆர்.எல்.எவ். பேச்சு திட்டமிட்டபடி மே 15 இல் நடக்கும்

### அமைச்சர் ரஞ்சன் நேற்று அறிவிப்பு

கொழும்பு, மே 4

★ வடக்கு, கிழக்கு மாகாண முதல்வர் திரு. அ. வரதராஜப் பெருமாள் நாடு திரும்பினால் அவர் மீது உடனடியாகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

★ அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் ஈ. பி. ஆர். எல். எவ்.இயக்கப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் திட்டமிட்டபடி இம்மாதம் 15 ஆம் திகதி நடைபெறும்,

பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்னா இவ்வாறு நேற்று அறிவித்தார்.

வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் குறித்துத் தெரிவிப்பதற்காக நேற்றுக் கூட்டப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து அவர் இந்த அறிவிப்பைவிடுத்தார்.

அந்த மாநாட்டின் போது அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

ரயிலில் பயணஞ் செய்த பொலீஸ் கான்ஸ்டபிள் மீசாலையில் வைத்து கொலை செய்யப்பட்ட சம்பவம் பற்றி அரசுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

ஈ. பி. ஆர். எல்.எவ். இயக்கத்தின் தமிழ்தேசிய இராணுவத்தினரே இக் கொலையைச் செய்ததாக பொலீஸ் மா அதிபரின் அறிக்கை தெரிவிக்கிறது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் மேலும் மோதல் இடம் பெறுவதைத் தடுத்து பயணிகளுக்கு பாதுகாப்பு அளித்து உள்ளனர்.

உடன் பயணம் செய்தவர்கள் சாட்சிகளாக உள்ளனர்.

ஈ. பி. ஆர். எல். எவ். பிரதிநிதிகளுடன் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தும் போது இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என அவர்களுக்கு வலியுறுத்திக் கூறுவோம்;

அதையும் மீறி அவர்கள் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இப் பேச்சுக்களின் போது அவர்களுக்கு தெளிவாக எடுத்துக் கூறு

( 7 ஆம் பக்கம் பார்க்க )

## முச்சந்தி முரளி



இந்தியத் தமிழரை கப்பல் ஏத்துறன் எண்டு தான் ரஞ்சன் விடாப்பிடியாய் நிக்கிறார். உவருக்கும் தொண்டாவுக்கும் செதியிலை கொழுவுமோ...? யார் கண்டது...!

## காஷ்மீர் பிரச்சினை:

## முன் நிபந்தனை இல்லாவிடில் இந்தியா பேசத் தயார்

புதுடில்லி, மே 4

முன்நிபந்தனை எதுவும் விதிக்காத பட்சத்தில் காஷ்மீர் பற்றிப் பாகிஸ்தானுடன் பேச இந்தியா தயாராக இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

வெளியுறவு அமைச்சர் இந்திரகுமார்குஜ்ரால் முன்கண்டவாறு நேற்று இந்திய லோக சபையில் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் வி. பி. சிங்குடன் காஷ்மீர் பற்றிப் பேச எந்த நேரமும் தயாராக இருப்பதாக பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர். பூட்டோ நேற்றுக் கூறியதற்குப் பதிலாக திரு. குஜ்ராலின் பேச்சு அமைந்தது.

பாகிஸ்தான் போரின் விளிம்புக்குச்செல்லக் கூடாது; அது அந்த நாட்டின் ஜனநாயகத்துக்கு ஆபத்தாக முடியும் என்றும் திரு. குஜ்ரால் சொன்னார்.

பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத பயிற்சி முகாம்கள் மீது இந்தியா தாக்குதலை

(7 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய மட்டத்திலான தமிழ்த் தினப் போட்டிகள் கொழும்பில் ஜூன் 15, 16இல்

யாழ்ப்பாணம், மே 4

தேசிய மட்டத்திலான தமிழ்த் தினப் போட்டிகள் எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற உள்ளன.

இம் மாதத்தில் நடைபெற இருந்த பிரஸ்தாப போட்டிகள் கடந்த மாதம் நிகழ்ந்த ரமழான் நோன்புப் பெருநாளை முன்னிட்டு பின் போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மாவட்ட ரீதியாக பாடசாலைகளில் நடைபெற்ற போட்டிகளில் தெரிவானோர் பற்றிய விபரங்கள் மாகாணக் கல்வி அமைச்சுக்கு

( 7 ஆம் பக்கம் பார்க்க )

### சுபநேரம்

04-05- 1990

வெள்ளிக்கிழமை சித்திரை 21 சுபநேரம்:

05-56 முதல் 07-26 வரை

இராகுகாலம்

10-26 முதல் 11-56வரை

# இந்தியப் பிரசைகள் விடயம் இ. தொ. கா. சம்பந்தப்பட்டதல்ல!

## திருப்பி அனுப்பப்படுவர் என்று ரஞ்சன் வலியுறுத்து

கொழும்பு, மே 4

இந்தியப் பிரசைகளைத் திருப்பி அனுப்புவது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சம்பந்தப்பட்ட விடயமல்ல. அது நாட்டின் குடியேற்ற வெளியேற்ற சட்டம் தொடர்புடையதாகும்.

இந்தியப் பிரசைகள் தற்போதுள்ள சட்டத்தின் படி அங்கு திருப்பி அனுப்பப்படுவார்கள்.

இவ்வாறு பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா மீண்டும் வலியுறுத்திக் கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் சொன்னதாவது:-

இந்தியா தான் செய்து கொண்ட ஒப்பந்தத்தைக் கௌரவித்து நடக்க வேண்டும். அது எவ்வாறு நடந்து கொள்கிறதுஎன்பதனை உலக நாடுகள் அவதானித்துக் கொண்டிருக்கின்றன..

தமிழகத்தில் அகதிகளாக உள்ள சுமார் ஒரு லட்சம் இலங்கைத் தமிழர்கள் மீண்டும் இலங்கை திரும்பும்போது இலங்கையில் இருக்கும் ஒரு லட்சம் இந்திய வம்சாவழித் தமிழர் இந்தியா திரும்புவர். என்று இந்திய அரசு கூறும் யோசனையை இலங்கை ஏற்றுக்கொள்ளாது.

இந்தியா சென்ற இலங்கை அகதிகளை இந்தியா மனமுவந்து ஏற்றுக்கொண்டுவிட்டு

( 7 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தடுத்து வைத்த 5 சிப்பாய்கள் விடுவிப்பு!

யாழ்ப்பாணம், மே 4

நேற்று முன் தினம் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை நெல்லியடிப் பகுதிகளில் சந்தேகத்துக்கு இடமான முறையில் வாகனம் ஒன்றில் சுற்றித்திரிந்த ஐந்து இராணுவச் சிப்பாய்கள் விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

பல இடங்களுக்கும் சுற்றித் திரிந்த இந்த சிப்பாய்கள் தமது நடமாட்டம் குறித்து திருப்தியான பதில் எதையும் தெரிவிக்காததை அடுத்து தடுத்து வைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக யாழ்ப்பாணம் கோட்டை பலாலி முகாம்களைச் சேர்ந்த மற்று இராணுவ அதிகாரிகள்

( 7 ஆம் பக்கம் பார்க்க )

## புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்காதது ஏன்?

கொழும்பு, மே. 4

விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் ஆயுதங்களை ஒப்படைக்காததன் காரணத்தை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா நேற்று செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

அவர் சொன்னதாவது:

தமிழ் தேசிய இராணுவத்தினர் இன்னமும் ஆயுதபாணிகளாக உள்ளனர். விடுதலைப் புலிகள் இயக்கத்தினரைக் கொலை செய்வதற்கு அவர்கள் திட்டமிட்டு வருகிறார்

(7 ஆம் பக்கம் பார்க்க )

# சமாதானத்தை நிலை நிறுத்த நாம் பலமாக இருக்க வேண்டும்

## கடற்றொழிலாளர் கருத்தரங்கில் டொமினிக் உரை

யாழ்ப்பாணம், மே. 4

நாம் சமாதானத்தையே விரும்புகிறோம். ஆனால் சமாதானத்தை உறுதி செய்ய நாம் பலமாக இருக்கவேண்டும்.

விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. ஸ்டான்லி டொமினிக் இப்படித் தெரிவித்தார்.

நேற்று நண்பகல் யாழ். மனோகரா படமாளிகையில் ''கடற்றொழிலாளரின் பிரச்சினைகளும் எதிர்கால நடவடிக்கைகளும்'' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

இந்தக் கருத்தரங்கில் கடற்றொழில் கூட்டுறவுத் திணைக்கள உயர் அதிகாரிகளும் மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளும் பங்குபற்றினர்.

யாழ் மாவட்ட மாதிரி நிர்வாகச் செயலகத்தின் கடற்றொழில் பகுதி பொறுப்பாளர் திரு. தம்பியண்ணன் கருத்தரங்கிற்குத் தலைமை வகித்தார்.

இந்தக் கருத்தரங்கில் உரையாற்றுகையில் திரு. டொமினிக் மேலும் கூறியதாவது:-



கடற்றொழிலாளர்கள் சமூகம் போர்க்குணம் கொண்ட சமூகம். அவர்களின் இந்தக் குணம் தேவையற்ற சமூக மோதல்களுக்காக விரயமாகு

( 7 ஆம் பக்கம் பார்க்க )

## ராமேஸ்வரம் கப்பல் சேவை:

## இலங்கையுடன் பேச நாளை இந்திய பிரதிநிதிகள் வருகை

தலைமன்னார் – இராமேஸ்வரம் கப்பல் சேவை ஆரம்பிப்பது குறித்து இலங்கை அரசுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக இந்திய அதிகாரிகள் குழு ஒன்று நாளை அல்லது நாளை மறுதினம் கொழும்பு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்க உயர் அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்தக் குழுவினருடன் இலங்கை அரசுப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்தி இக்கப்பற் சேவையை ஆரம்பிப்பது குறித்து இறுதி முடிவு எடுப்பர் என்றும் அந்த அதிகாரி சொன்னார்.

(மற்றொரு செய்தி 4 ஆம் பக்கத்தில்) (உ)

## வல்வை அம்மன் வசந்தோற்சவ விழா நாளை

யாழ்ப்பாணம், மே 4

வல்வை முத்துமாரிஅம்மன் கோயில் வசந்தோற்சவ விழா நாளை சனிக்கிழமை வெகு கோலாகலமாகக் கொண்டாடப்பட இருக்கின்றது.

மகோற்சவத்தில் பதினொராம்நாளானவசந்தோற்சவத்தன்று அம்பாள் ஊஞ்சலில் சயனித்த வண்ணம் பக்தர்களுக்கு காட்சி கொடுப்பார்,

சித்திரைப் பௌர்ணமி தினமான எதிர்வரும் 9 ஆம்திகதி தீர்த்தோற்சவம் இடம் பெறும். [ஒ]

(சிறப்பிதழ் உள்ளே)

## பயிலுநர் ஆசிரியர் தெரிவு: விரைவில் மீள் பரிசீலனை

யாழ்ப்பாணம், மே 4

யாழ். மாவட்டத்திலிருந்து அண்மையில் தெரிவு செய்யப்பட்ட பயிலுநர் ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் மீண்டும் பரிசீலனை செய்யப்பட இருக்கின்றன.

மீள்பரிசீலனை வேலைகள் இம்மாத நடுப்பகுதியில் ஆரம்பமாக உள்ளன.

வெளிநாடு சென்றுள்ள கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் அடுத்த வாரம் இங்கு

( 7ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒரு வயது ஒரு சோடி (F) பொமேறியன் நாய்க்குட்டிகள் கூட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு இல-4, நாயன்மார் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். (13015)

### சஞ்சிகை விற்பனைக்கு

க. பொ. த. (உயர்தர) மாணவர்களுக்கான பொருளியலாளன்செப் /டிசம்பர் 1989 மார்ச் 1990 விற்பனையாகின்றது. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும் மண்டேலா ரேடர்(புத்தகசாலை)இல. 2 பஸ் நிலையம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (3235)

### சஞ்சிகைகள்

கலைக்கதிர், கலைமகள், ஞானபூமி, ரத்தின பாலா, குமுதம், கல்கி, ஆனந்த விகடன், துக்ளக், பேசும்படம், பொம்மை, சல்சண்டு, இந்தியாருடே,[தமிழ் ஆங்கிலம்] Time News week Sport Star Front Line மற்றும் சஞ்சிகைகள் அனைத்தும் சந்தா ஏற்றுக்கொள்கிறோம். இம் மாதம் முதல் சஞ்சிகைகளின் விலை குறைக்கப்பட்டுள்ளது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி/4340]

### அச்சுக்கோப்பாளர் தேவை

தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் அனுபவம் வாய்ந்த அச்சுக்கோப்பாளர் உடன் தேவை. நேரில் சமுகமளிக்கவும். சம்பளம் திறமை அடிப்படையில்வழங்கப்படும். அதிபர் புனிதவளன் கத்தோலிக்கஅச்சகம்,360 ,பிரா தான வீதி, யாழ்ப்பாணம். (13012)

### தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் வைத்தியசாலை ஒன்றுக்கு தாதிமார் (Nurses) தேவை உடன் தொடர்பு கொள்ளவும். திருமதி. ரஞ்சினி பரராஜசேகரன்9/8. 4ம் குறுக்கு வீதி, (வேம்படிவீதி)யாழ்ப்பாணம். சந்திக்கும் நேரம் 1 மணி— 3½ மணிவரை. (13008)

### Thanks

Thank you St. Jude for the Favour Granted. Mrs. S. Rajakumar. (12990)

### தவறிவிட்டது

01-05-90 இரவு கொழும்பில் இருந்து வந்த தபால் வண்டியில் பெண்ணின் கைப்பை ஒன்று பளைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. அதற்குள் (558460318V) இலக்கமுடைய அடையாள அட்டையும், வேறும் பல முக்கிய தஸ்தாவேஜுக்களும் அடங்கியுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (13014)

ம மனோகரன் ஆகிய எனது அடையாள அட்டை (640691735V) பளைக்கும்- மிருசுவிலுக்கும் இடையில் 29-04-90இல் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் பொன் கந்தையா வீதி, நெல்லியடி என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். (சி/4486)

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை 06-05-90 ஞாயிறு மு. ப 10. 30 பி. ப 1. 00/3 30 ஆகிய நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும். புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாவிடை விற்பனைக்கு உண்டு. புதிய கல்வி நிலையம், செங்காதரன், ஆஸ்பத்திரி முன்பாக, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். (3422)

### கல்வி

கல்யாணி ஆங்கிலக் கல்வி நிலையம், 204, மானிப்பாய் றோட், ஒட்டுமடத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சனி, ஞாயிறு ஆங்கில வகுப்புகள் 5. 5. 90 (சனி) தொடக்கம் முழு நேர வகுப்புகளாக நடைபெறும். S. ஜெயராஜா, இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர். (3419)

### பயிற்சிகள்

தொழில்நுட்ப அறிவை பெறுபவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் குறுகிய காலத்தில் சிறந்த செய்முறை அறிமுறைப் பயிற்சிகளுடன் பெறுமதியான சான்றிதழும் வழங்கப்படும். Radio T.V. Deck, Airconditioning Refrigeration, வயறிங் வெல்டிங், வைண்டிங் SpokenEnglish Typing ஆரம்பமாகின்றன. Vispa Engineering Aid Hall 328, Navalar Road, Jaffna (13006)



திருகோணமலை பெரிய முற்ற வெளியில் சமீபத்தில் இடம் பெற்ற விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரமாண்டமான கூட்டத்தின் போதுஎடுக்கப்பட்ட படம். மக்கள் முன்னணித் தலைவர் திரு. மாத்தயா, காசிஆனந்தன், திருமலை மாவட்டப்பொறுப்பாளர் திரு. பதுமன், அரசியல் பொறுப்பாளர் திரு. ரூபன் தம்பலகாமம் பொறுப்பாளர் திரு. ரவி ஆகியோர் மேடையில் அமர்ந்துள்ளனர். (இ - 150)

# ஆட்சியாளரின் மாயவலையில் மக்கள் விழுந்துவிடக் கூடாது

## புதுக்குடியிருப்பு மேதினக் கூட்டத்தில் உரை

புதுக்குடியிருப்பு மே 4

''ஆட்சியாளர்கள் பதவியில் நிலைத்து இருப்பதற்காக மக்களுக்குக் கவர்ச்சியான வாக்குறுதிகளை அள்ளி வழங்குகின்றார்கள். பின்னர் அவற்றை நிறைவேற்ற பணவீக்கத்தை உண்டுபண்ணுகிறார்கள்; விலைவாசிகளை அதிகரிக்கின்றார்கள். ஏழை அரசாங்க ஊழியர்களின் வயிற்றில் அடிக்கின்றார்கள்; தொழிலாளர் மத்தியில் வேற்றுமைகளை உண்டுபண்ணித் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள முயல்கிறார்கள். அரசு விதிக்கும் மாய வலையில் விழுந்து விடாதிருக்க அனைவரும் விழிப்பாக இருக்க வேண்டும்.''

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் ஆதரவில் புதுக்குடியிருப்பில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் அரச ஊழியர் சார்பில் உரையாற்றிய திரு. ஏ. சோதிலிங்கம் இவ்வாறு கூறினார்.

தொழிற் சங்கவாதி ஆசிரியர் முருகேசு மேதினக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

திரு சோதிலிங்கம் மேலும் பேசுகையில் ''இந்த நாட்டிலே மேதினம் கொண்டாட ஆரம்பமாகி 58 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் இன்று தான் முதன் முதலாக புதுக்குடியிருப்புக் கிராமத்திலே மேதினம் கொண்டாடப்படுகின்றது'' என்று குறிப்பிட்டார்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் திரு வ. அன்னலிங்கம், தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் திரு. ச. செல்வராசா, விவசாயிகள் சார்பில் எஸ் வி நடா, கிராம சேவையாளர்கள் சார்பில் கே. ரி சிவராசா, அமைப்புக் குழுவின் சார்பில் திரு. மாதவராசா ஆகியோர் உரையாற்றினார்கள்.

கா. யோ. அற்புதராணி, பூபதி ராஜா ஆகியோர் மேதினப் பாடல்களை பாடினார்கள். (க-126)

# ரூபவாஹினியில் உலக கிண்ண உதைபந்தாட்டம்

கொழும்பு மே 04

உலகக் கிண்ண உதைபந்தாட்டப்போட்டிகள்தொடர்பான நிகழ்ச்சிகளை இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் அதன் தொலைக்காட்சி சேவையில் ஒவ்வொரு புதன் கிழமையும் இரவு 8.30 மணிக்கு ஒளிபரப்புச் செய்கின்றது

போட்டிகள் தொடர்பான நிகழ்ச்சித் தொடரில் முதலாவது கடந்தபுதன் கிழமை ஒளிபரப்பானது (ப)

## யாழ் வெற்றிலைக்கேணி பஸ்சேவை

யாழ் - வெற்றிலைக்கேணி புதிய பஸ் சேவை திங்கள் மாலை 3மணிக்கு ஆரம்பமானது.

யாழ் நகரிலிருந்து மாலை 3 மணிக்கு ஆழியவளை ஊடாக வெற்றிலைக்கேணியைச் சென்றடையும் இந்த பஸ் அதிகாலை 6 மணிக்கு வெற்றிலைக் கேணியிலிருந்து யாழ்ப்பாணத்தை வந்தடையும்.

இப் புதிய சேவை ஆழியவளையிலிருந்து கடற்கரை வீதி ஊடாகவே, வெற்றிலைக்கேணிக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இச் சேவை நீடிப்பினால் வடமராட்சி கிழக்கு கிராம மக்கள் நன்மை அடைவார்கள். [இ-144]

## ஊழியருக்கு கஷ்டநிவாரண நிதி

முல்லைத்திவு மே 2

முல்லைத்தீவு பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் செயலகத்தில் பணிபுரிவோருக்கு பணிப்பாளர் திரு. இ. தர்மகுலசிங்கம் கஷ்ட நிவாரண நிதிஉதவியை வழங்கினார்.

# நல்ல கலைகளைக் கற்பதற்கு சிறுவரைப்பழக்க வேண்டும்

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உரை

அராலி, மே 4

''விளையும் பயிர்களான சிறார்கள் நல்ல வகையில் வளர்க்கப்பட வேண்டும். அவர்கள் நல்ல ஆரோக்கியமான கலைகளைக் கற்கவும் பழக்கவும் வேண்டும். தற்கால சினிமா பாணியில் கலைகளைப் பழக அனுமதிக்கக் கூடாது.

அராலி தெற்கு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் பொன் விழாக் கொண்டாட்டங்களில் இறுதிநாள் நிகழ்ச்சிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு சுந்தரம் டிவகலாலா இவ்வாறு கூறினார்.

இவ்விழாவின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கலாநிதி க. சிற்றம்பலம் ''இவ்விழாவின் நினைவாக ஒரு நூலகக் கட்டடத்தையாவது அமைத்தல் வேண்டும்'' என்றார்.

அடுத்து உரையாற்றிய பிரஜைகள் குழுத்தலைவர் திரு. நா குகராசா ''மக்களின் தேவைகளை நிறைவேற்றி வரும் இந்நிலையம் தொடர்ந்து சுகாதார சேவையில் கவனம் செலுத்தி செயலாற்ற வேண்டும்'' எனக் கேட்டுக்கொண்டார்.

ஆசிரியர் வி. சிவஞானபோதன், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி இராணி சின்னத்தம்பி ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

நிலையத்தால் நடத்தப்பட்ட விளையாட்டுப்போட்டிகள், நாடகப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்களை திருமதி சிவமலர் டிவகலாலா வழங்கினார். இதைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. (க-12)

## மினிவான் மோதி மாணவி காயம்

கடந்த செவ்வாய்க்கிழமை காலை நெடியகாடு, பருத்தித்துறை வீதியில் மினிவான் ஒன்று சைக்கிளுடன் மோதியதால் சைக்கிளில் வந்து கொண்டிருந்த மாணவி ஆர். பாலராதிகா (வயது 16) காயமடைந்தார். இவர் ஊறணி ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். [illegible]

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



## அமரர் வே. கதிர்காமு

[இளைப்பாறிய கிளாக்கர்]

தோற்றம்: 12 - 10 - 1925 மறைவு: 04 - 04 - 1990

எங்கள் அருமைத் தந்தையே! எங்களை எல்லாம் அன்புடனும், நேர்மையுடனும், பாசத்துடனும் நல்வழிகாட்டி வளர்த்து, கண்ணை இமைகாப்பது போல் காத்து, உங்கள் புன்னகை தவழும் இன்முகத்தை எப்படி மறப்போமோ வாழ்வில் எந்நாளும்!

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சி 04-05-90 வெள்ளிக்கிழமை பகல் 10.00 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இறுதிக் கிரியைகளின் பொழுது வருகை தந்தவர்களுக்கும் தபால், தந்தி மூலம் அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எங்கள் உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்

இங்ஙனம்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

''சுப்பிரமணிய வாசம்''
புலோலி மேற்கு
புலோலி (13020)

# ஆறாம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## செல்வன் நவநீதன் வீரசிங்கம்

ஈழமண்ணின் மீட்பு: 08 - 12 - 1968 அந்நியரின் அழிப்பு: 08 - 12 - 1989

ஈழவள மண்ணில் எழுந்தெறிக்கும் உதய சூரியனைப் போல் இவ் ஈழமண்ணில் எங்கெல்லாம் நாம் உனைக் கண்டோம். அநியாய அன்னிய அழிப்புக்கு உனை இழந்தோம்.

05 - 05 - 90 இல் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

செ. வீரசிங்கம்,
[illegible] ஒழுங்கை,
[illegible] [3398]

# மிருகபலி நிறுத்தப்பட்டது

நீர்வேலி, மே 4

வருடாவருடம் ஆடு, கோழி பலியிடப்பட்டு வந்த உரும்பிராய் மடத்தடி வயிரவர் கோவில், தெல்லிப்பழை குழாம் பத்தை வயிரவர் கோவில் என்பவற்றில் விடுதலைப்புலிகளின் தலையீட்டால் இவ்வருடம் மிருக பலி நிறுத்தப்பட்டுள்ளது. (இ)


## வாங்கிவிட்டீர்களா? படித்து விட்டீர்களா?

ஜோதிட ஜோதி

முன்வினை - முயற்சி - திருவருள்

## சித்திரை மாத இதழ்

இவ்விதழில்

- ★ உங்களுக்கு மாத பலன்கள் எப்படி?
- ★ புத்தாண்டின் பலன்கள்
- ★ புத்திரதோஷமும் - நிவர்த்தியும்
- ★ சோதிடத்தில் சூரியன்
- ★ அருளும் பொருளும் தரும் குரு
- ★ ஞாயிற்றுக்கிழமைகளில் சித்திதரும் செயல்கள்
- ★ சுத்தானந்த பாரதியாரின் ஜாதகக் குறிப்பு
- ★ இன்னும் பல .........

விலை ரூபா 10/- மட்டுமே

பிரதிகளுக்கு
உதயன் முகவர்களை நாடுங்கள் [சி-4492]

## கம்பியூட்டர் கல்வி

★ Diploma in Data Processing and Computer Programming in BASIC Language

ஆரம்பம்: 12 May 1990
(சனி, ஞாயிறு வகுப்புக்கள்) நேரம்: 1. 30 P. m.

LOTUS 1-2-3

ஆரம்பம்: 5 th May 1990
(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)

O/L படித்த இருபாலாரும் சேரலாம். மிகவும் விளக்கமான முறையில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.




UNIKCO COMPUTER CENTRE

No. 5, Power House Road, 2nd Lane, JAFFNA. (சி-4363)


# ஈராண்டு நினைவஞ்சலி



## திருமதி மகேஸ்வரி திருநாவுக்கரசு

(யாழ் மத்திய கல்லூரி இளைப்பாறிய ஆசிரியை)

தோற்றம்: 28 - 10 - 1926 மறைவு: 26 - 04 - 1988

திதி:-04 - 05 - 1990

எண்ணும் எழுத்தும் இன்முகத்தோடெம் சிறார்க்கு கண்ணும் கருத்தோடு கற்பித்த எம்தாயே உண்மையிலே நின்சேவை உலகளவும் நிலைத்திருக்க விண்ணுலகம் சென்றனையோ வேதனையோ மாறாது.

குடும்பத்தினர்.

62, மணல்தறை ஒழுங்கை,
திருநெல் வேலி,
யாழ்ப்பாணம். [C. 4366]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு.

**பொருள்:**

இம்மடந்தையொடு எம்மிடையே உள்ள நட்பு முறைகள், உடம்போடு உயிர்க்கு உள்ள தொடர்புகள் எத்தன்மையானவையோ அத்தன்மையானவை.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288

04 - 05 - 1990 த. பெ இலக்கம் 25


## வெளிச்சத்துக்குக் கொண்டு வருக!

வெளிநாடுகள் பலவும் புனர்வாழ்வு, புனர்நிர்மாண வேலைகளுக்கென வழங்கிய நிதியில் பெரும் மோசடி நடந்திருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது! புனர்வாழ்வு, சமூகநலன் துறைகளுக்குப் பொறுப்பான புதிய அமைச்சர் திரு. ஏ. எம் எச் அதிகாரி, இதற்கு முன்னர் புனர்வாழ்வுத்துறை அமைச்சில் இடம்பெற்ற வரவு — செலவுகளை ஆராய்ந்த போது, வெளிநாட்டுப் பணத்தில் பெரும் மோசடி நடந்திருப்பதற்கான சந்தேகங்கள் ஏற்பட்டனவாம்.

புனர்வாழ்வு, நிர்மாணப் பணிகளுக்கெனக் கிடைத்த பணத்தைக் ஆளுங்கட்சிப் பிரமுகர் ஒருவர் ஏப்பம் விட்டிருக்கிறார் என்றும், அந்தப் பணத்தில் பல ஆடம்பரப் பொருள்களை இறக்குமதி செய்தார் என்றும் மேலும் கண்டறியப்பட்டுள்ளதாம்!

இந்தச் சந்தேகங்கள், கண்டுபிடிப்புகளைத் தொடர்ந்து ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாச விரிவான விசாரணைக்கு உத்தரவிட்டிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

இலங்கையில் தலைவிரித்தாடிய இராணுவ நடவடிக்கைகளால், அட்டூழியங்களால், வன்செயல்களால் நாடு சீரழிந்தும், பொருளாதாரம் நலிவுற்றும், மக்கள் உயிர், உடைமைகளைப் பறிகொடுத்து நாதியற்றும், எல்லா வகைகளாலும் மெலிந்து எலும்பும் தோலுமாகி உள்ளது எல்லோரும் அறிந்த விடயம். அதனால் நாட்டுக்குப் புனர்நிர்மாணமும், மக்களுக்குப் புனர்வாழ்வும், அவசரமாகவும், பெரிய அளவிலும் தேவைப்படுகின்றன.

அதிலும் இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து பாதிக்கப்பட்டது தமிழ்மண்; பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள். ஆகையால் பெருமளவில் புனர்வாழ்வு தேவைப்படுபவர்கள் தமிழ்மக்கள்; பெருமளவில் புனர்நிர்மாணம் வடக்கு—கிழக்குக்கே தேவைப்படுகிறது.

இராணுவ நடவடிக்கைகளாலும், வன்செயல்களாலும் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் 1970 ஆம் ஆண்டுக்கு முந்திய நிலையிலிருந்து ஐம்பது வருடங்கள் பின்தள்ளப்பட்டுள்ளன. இப்பிரதேசங்களின் பொருளாதார நிலை சமூகவியல் நிலை, மக்கள் நலத்துறையில் அவர்களுக்கான வசதியியல் என்பனவற்றை சற்று ஆழமாக நோக்கினால் பின்தள்ளப்பட்டதன் பரிமாணம் தெளிவாகத் தென்படும்.

இந்த நிலையை அனுதாபத்தோடும், மனிதாபிமானத்தோடும் பார்க்கும் வெளிநாடுகள் பல தமிழ்ப் பிரதேசங்களின் புனர்நிர்மாணத்துக்கும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுக்குமென நிதி உதவிகளைச் செய்கின்றன. ஆனால் கொழும்பு அரசு அந்த உதவிகளைத் தென்பகுதிகளுக்கு ஊட்டி வளர்க்கிறது. இது குறித்து இப்பத்தியில் பல தடவை கண்டனமும், கவலையும் தெரிவித்திருந்தோம்.

கடந்த இரண்டொரு வருடங்களில் தென்னிலங்கையிலும் உயிர், உடைமை அழிவுகள் ஏற்பட்டன என்பதை நாம மறந்து விடவில்லை; மறைத்துவிட முயலவும் இல்லை. நாட்டின் முழு அழிவுகள், சேதங்கள் பற்றி உத்தேச விகிதாசார மதிப்பீடு ஒன்று செய்தால், தமிழ்ப் பகுதிகளின் அழிவு 70 சதவீதம் என்றும் தென்னிலங்கையின் சேதாரம் 30 சதவீதம் என்றும் முடிவு கிடைக்கும்.

ஆனால், வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் உதவிகளில முப்பது சதவீதமாவது தமிழ்ப் பகுதிகளுக்குச் "சுவறு"கிறதா என்றால இல்லை! வெளிநாட்டுப் பணத்தைக்கொண்டு இங்கு ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்ட பல புனர்நிர்மாண, அபிவிருத்தி வேலைகளை இபபொழுது ஆரம்பிக்கக்கூட, சில உயர் அதிகாரிகள் நிலைமை "சரியிலலை" என்று கருதுகிறார்களாம்! பாதுகாப்பு நிலைமை உகந்ததாக இலலை; இயல்புச் சூழ்நிலை இல்லை; தமிழ்ப் பகுதிகளில் அமைதி இல்லை என்று கூறிக்கொண்டு, வெளிநாட்டு உதவிகளை தெற்கே மட்டும் ஆற்றுப்படுத்தியவர்களுக்கு இன்னமும் தமிழ்ப் பகுதிகள் பக்கம் பார்க்க மனம் வருவதாக இல்லை

வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் புனர்நிர்மாண — புனர்வாழ்வு உதவிகளுக்கு மேல், ஒட்டுண்ணிகளாக இருந்து புசித்து வளரும் பெரும் புள்ளிகள் இருக்கிறார்கள் என்பது மேலும் பேரிடி தருவதாகும்.

இது குறித்து ஆரம்ப புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு, அதன் பின் பகிரங்க விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து தண்டிக்க வேண்டும்.

அது மட்டுமன்றி தமிழ்ப் பகுதிகளுக்கென வெளிநாடுகள் வழங்கும் உதவிகள் நேரடியாக வந்து சேர ஏற்பாடு செய்ய வேண்டும். அத்தோடு புனர்வாழ்வு—புனர்நிர்மாணத்துக்கென வரும் நிதிகள், உதவிகளை ஒன்று செறித்து அதில் 70 சதவீதத்தை தமிழ்ப் பகுதிகளுக்கு ஆற்றுப்படுத்த வேண்டும்.

கமநல சேவை நிலைய

## திருத்தும் வேலை இடைநிறுத்தம் பொதுமக்கள் பெரும் அவதி

கோப்பாய் மே 4

அண்மைக்கால சம்பவங்களின்போது சேதமடைந்த கோப்பாய் கமநல சேவை நிலையத்தின் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையம் இயங்காது இருப்பதினால் இப் பகுதி மக்கள் தற்காலிகமாக இயங்கி வரும் இடத்துக்கு அதிக தூரம் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (இ-72)

## இன்னும் சம்பளம் கிடைக்கவில்லை

முல்லைத்தீவு, (...)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சடந்த மார்ச் 15 ஆம் திகதி நியமனம் பெற்ற பயிலுநர் ஆசிரியர்களுக்கு இது வரை சம்பளப் பணம் வழங்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

சம்பளப் பணம் கிடைக்காததால் மேற்படி ஆசிரியர்கள் பெரும் கவலையடைந்துள்ளனர். (ஒ-92)

## கிளிநொச்சியில் செல்லப்பாவின் இன்னிசை

கிளிநொச்சி, மே 4

தமிழக எழுச்சிப் பாடகர் தேனிசை செல்லப்பாவின் இசைநிகழ்ச்சி கிளிநொச்சியில் எதிர்வரும் 15ஆம் திகதி இரவு 7 மணிக்கு நடைபெற இருக்கிறது.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ள இந்தநிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் பலர் உரையாற்றுவார்கள். (ஒ-76)

## பயிற்சி வகுப்பு

புங்குடுதீவு, மே 4

யாழ்மாவட்ட கூட்டுறவுச் சபை கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்குப் பயிற்சி வகுப்புக்களை நடத்தி வருகிறது.

புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ. சங்க தலைமைச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற இவ்வகுப்புக்களில் கிளைப்படிவங்கள் கையாளுதல் சிறு அளவில் செய்யும் வியாபாரம், விற்பனை அபிவிருத்தி என்பவை பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது.

# யாழ். பல்கலைக்கழகத்துக்கு அணுவியல் மருத்துவத்துறை

### பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் தகவல்

—உதயன் கொழும்புச் செய்தியாளர்—

கொழும்பு மே 4

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு அணுவியல் மருத்துவம் (Nuclear Medicine) வானியல் ஐசோதோப் நிலையம் ஆகியன ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழகத்துக்கு, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஆலோசனை வழங்கியுள்ளது. அதே நேரம் அவற்றை அமைப்பது தொடர்பாக சுகாதார திணைக்களத்துடனும், அமைச்சின் செயலாளருடனும் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

இத்தகவலை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் திரு. அர்ஜுன அலுவிகார உதயனுக்கு அளித்த பேட்டியின் போது தெரிவித்தார்.

திரு. அலுவிகார மேலும் தகவல் தருகையில் கூறியதாவது:-

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு ஒரு போதனா வைத்தியசாலை தேவை என கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இதனை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். இந்த விடயத்தில் எதுவித பிரச்சினையும் இல்லை. இது தொடர்பாகவும் நாம் ஆலோசனை கூறியிருக்கிறோம்.

போதனா வைத்தியசாலை தொடர்பில் யாழ் பல்கலைக்கழகம் சுகாதார அமைச்சு, சுகாதாரத் திணைக்களம் ஆகியவற்றுடன் ஒரு இணக்கத்துக்கு வரவேண்டும்.

இப்படி திரு. அர்ஜுன் அலுவிகார கூறினார். (இ - 2)

## தமிழ் அறிஞர் மூவருக்கு மட்டக்களப்பில் பட்டமளிப்பு

மட்டக்களப்பு மே 4

மட்டக்களப்பு மாவட்ட கலாசார பேரவை தமிழ் அறிஞர்கள் மூவரை அண்மையில் பட்டமளித்துக் கௌரவித்தது.

நகர மண்டபத்தில் அரச அதிபர் திரு. ஆர். யோகநாதன் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது

கல்விமான் கே. கணபதிப்பிள்ளைக்கு தத்துவ சிரோண்மணி பட்டமும்—

வித்துவான் பண்டிதர் வீ. சி கந்தையாவுக்கு மகாவித்துவான் பட்டமும்—

பண்டிதை கங்கேஸ்வரி கந்தையாவுக்கு இலக்கியமணி பட்டமும் வழங்கப்பட்டன. (இ-21)

## அபிவிருத்தி சங்க சிறப்புவிழா

பச்சிலைப்பள்ளி மே 4

பளை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் பளை உதவிஅரசாங்க அதிபர் க. சந்தசாமியால் மே 9 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும். [இ-117]

## இந்துமகளிரில் புதிய கட்டடம்

யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையில் 8 லட்சம் ரூபா செலவில் புதிய மாடிக்கட்டிடம் ஒன்று கட்டப்படவுள்ளது. (இ-69)

## முத்து ஐயன் கட்டில் "ஜீவநகர்"

ஒட்டுசுட்டான் மே 4

கடந்த போராட்ட காலத்தில் வீரமரணமடைந்த விடுதலைப் புலிப் போராளி ஒருவரின் பெயர் முத்துஐயன் கட்டு திட்டத்தில் உள்ள ஒரு கிராமத்துக்கு சூட்டப்பட்டுள்ளது.

சின்ன ஜீவன் என்பவரே இப்போராளி ஆவார். அவர் முத்து ஐயன் கட்டுப் பகுதியைச் சேர்ந்தவர்.

அவரின் பெயரை கொண்டு அக்கிராமத்துக்கு "ஜீவநகர்" என பெயர் சூட்டப்பட்டது.

அக்கிராமத்தின் பெயர் அவரின் பெற்றோரால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இவ்வைபவத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசப் பொறுப்பாளர் திரு. வேணு மற்றும் பொதுஸ்தாபனப் பிரமுகர்கள், பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர். (இ-113)

சத்ய சாயி சேவா சமித்தி நடத்துகிறது

## முள்ளியவளையில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 4

முல்லைத்தீவு பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவாசமித்தி எதிர்வரும் 9 ஆம் 10 ஆம் 11 ஆம் திகதியில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில்ஆசிரியர்களுக்கான மனித மேம்பாட்டுக் கல்விக் கருத்தரங்கை நடத்துகிறது.

முள்ளியவளை கல்வி வட்டார ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் இதில் கலந்து கொள்கின்றனர்.

கருத்தரங்கு தினமும் காலை8 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 2 30 மணிவரை நடைபெறும்.

முல்லைத்தீவு பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவாசமித்தியால் நடத்தப்படும் இரண்டாவது கருத்தரங்கு இதுவாகும். (இ)

# கல்முனை வங்கிக் கிளைகளில் அடகு நகைகள் மீளளிப்பு

அம்பாறை, மே 4

கல்முனைப் பிரதேசத்திலுள்ள மக்கள் வங்கிகிராமிய வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்ட நகைகள் மீளளிக்கப்படவிருக்கின்றன.

நகைகளை அடகு வைத்து மீண்டும் பெற்றுக்கொள்வதற்காகப் பணம் செலுத்தியவர்களுக்கே நகைகள் மீளளிக்கப்படவிருக்கின்றன.

இம்மாதம் மேமுதல்வாரத்திலிருந்து கல்முனை மக்கள் வங்கிக்கிளையில் வைத்து நகைகள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கல்முனை கிராமிய வங்கியில் அடகு வைக்கப்பட்ட நகைகள் மேமாதம் 4 ஆம் 5 ஆம் திகதிகளிலும், சம்மாந்துறை மக்கள் வங்கி நகைகள் 4, 7, 8, ஆம் திகதிகளிலும்.

நிந்தாவூர் கிராமிய வங்கிக் நகைகள் 7 ஆம் திகதியும், சம்மாந்தமருது கிராமிய வங்கி நகைகள் 8 ஆம் திகதியும்.

திருக்கோவில் மக்கள் வங்கி நகைகள் 7, 8, ஆம் திகதிகளிலும் மீளளிக்கப்படவிருக்கின்றன.

கல்முனை மக்கள் வங்கியில் பணம் செலுத்திய3500பேரது நகைகளும் காரைதீவு மக்கள் வங்கிக்கிளையில் பணம் செலுத்திய 1500 பேரதுநகைகளும் விரைவில் வழங்கப்படவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (க-14)

### நினைவில் இன்று

04-05-1990

- திப்பு சுல்தான் நினைவு தினம்

வவுனியாவில்

## திருத்தல பாத யாத்திரை

யாழ்ப்பாணம், மே 4

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவு, சமாதானத் திருத்தலப் பாதயாத்திரை ஒன்றை இன்று வெள்ளி காலை 8 00 மணிக்கு வவுனியா குடியிருப்பு சித்திவிநாயகர் ஆலயத்தில் ஆரம்பிக்கிறது.

இந்த யாத்திரைக் குழுவினர் நூற்றுக்கும் அதிகமான கோவில்களை தரிசிக்க உள்ளனர்.

யாத்திரையின் நோக்கம் நாட்டில் சமாதானம், சுபீட்சம், அமைதி நிலவ வேண்டும் என்பதே.

யாத்திரை இறுதியாக 14 ஆம் திகதி திங்கட்கிழமை சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நிறைவுறும்.

இதைத் தொடர்ந்து பிற்பகல் 2 மணிக்கு பொதுக் கூட்டமும் நடைபெறும்.

### நாணய மாற்று விகிதம்

02-05-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 230.71 | 231.67 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997.45 | 4003.50 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6550.28 | 6580.65 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2369.31 | 2387.62 |
| 100 | பிரெஞ்சு [illegible] | [illegible] | [illegible] |
| 100 | ஜப்பானிய யென் | 25.1233 | 25.3516 |

### சமய நிகழ்ச்சிகளில்

#### வற்றாப்பளை கண்ணகை அம்பாள் பொங்கல் விழா

ஒட்டுசுட்டான் மே 4

வற்றாப்பளை கண்ணகை அம்பாள் தேவஸ்தான வருடாந்த பொங்கல்விழா ஜூன் மாதம் 4 ஆம் திகதி தீர்த்தத்துடன் ஆரம்பமாகும்.

11 ஆம் திகதி பொங்கல் விழா நடைபெறும்.

பஞ்சாங்கத்தில் இது தவறுதலாக பிரசுரிக்கப்பட்டுள்ளதாக கோவில் பரிபாலன சபையினர் தெரிவிக்கின்றனர் (இ-113)

#### சங்காபிஷேகம்

வலவெட்டித்துறை மே 4

கரவெட்டி கிழக்கு நுணுவில் குளக்கோட்டு விநாயகர் ஆலய சங்காபிஷேகம் நாளை 5 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும். (இ-160)

#### இரதோற்சவம்

கோப்பாய் மே 4

நீர்வேலி கந்தசாமி கோவில் இரதோற்சவம் 8 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெறும். மறுநாள் காலை தீர்த்த உற்சவம் இடம் பெறும். (க-72)

## வாசகர் திருமுகம்

### இளவாலை பிரதான வீதி

இளவாலை பிரதான வீதி பள்ளமும், படுகுழிகளும் நிறைந்து காணப்படுவதால் வாகனங்கள் செல்வதில் பெரும் சிரமங்கள் ஏற்படுகின்றன.

குறிப்பாக இளவாலையூடாக கீரிமலை செல்லும் வாகனங்கள் இந்த வீதியால் செல்லும்போது பாதிப்புக்குள்ளாகின்றன.

எனவே இளவாலை பிரதான வீதியைச் செப்பனிட்டு திருத்தியமைப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உடன் முன்வரவேண்டும்.

ஏ. எல். எம். சொலமன்,
இளவாலை.

### கப்பல் சேவை நடைபெறுமா?

தலைமன்னார் - ராமேஸ்வரம் கப்பல் சேவை நடைபெறுமா?

இது பற்றித் தலைமன்னாரில் மாநாடு நடைபெற்றதாக அறிந்தேன்.

முடிவு என்ன என்பதை சம்பந்தப்பட்டவர்கள் அறியத் தருவார்களா?

க. ராமசாமி,
கிளிநொச்சி.

## செய்திக்கொத்து

### வறிய மாணவருக்கு புலமைப்பரிசில்

அம்பாறை மே 4

அம்பாறை மாவட்டப் பாடசாலைகளில் ஜீ. சி. ஈ. உயர்தரக் கல்வியைத் தொடரவுள்ள வறிய மாணவர்கள் புலமைப்பரிசில் பெறுவர்.

அந்- நுஸ்ரத் எனப்படும் வறிய குடும்ப அபிவிருத்தி சாந்தி, சமாதான சமூகநலன் புரிச் சங்கம் இப்புலமைப் பரிசில் திட்டத்தை நடைமுறைப்படுத்தும்' (ப-14)

### திரிசாரணர் கூட்டம்

யாழ்ப்பாணம் மே 4

எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் நல்லூர் திரிசாரணர் குழுக்கூட்டம் செயலாளர் தி. ஸ்ரீதரன் தலைமையில் 163, நாவலர் வீதியில் நடைபெறும். (இ)

### ஒத்தி வைப்பு

அம்பாறை மே 4

அஞ்சல்தொலைத் தொடர்புகள் சேவையாளர் சங்க கல்முனை மாவட்டக்கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கால வரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 29 ஆம் திகதி இந்தப் பொதுக்கூட்டம் நடைபெற ஏற்பாடாகி இருந்தது. (க - 14)

### அம்புலன்ஸ் திருத்த உதவி

அம்பாறை மே4

பழுதுற்றுக்கிடந்த பொத்துவில் அரசினர் வைத்தியசாலை அம்புலன்ஸ் வாகனம் தயாளசிந்தை கொண்ட சமூக சேவையாளர் ஒருவரது பண உதவியுடன் திருத்தப்பட்டு இப்போது சேவையில் ஈடுபடுகிறது.

வாகனம் பழுதடைந்த நிலையில் இருந்த போது அதனைத் திருத்தி சேவைக்கு விடுவதில் சுகாதாரத்திணைக்களம் தாமதம்காட்டி வந்தது. இதனால் அவசர சிகிச்சை தேவைப்பட்ட நோயாளர்களைக் கவனிப்பதில் பெருஞ்சிரமும் பணச் செலவும் ஏற்பட்டன.

இதனை உணர்ந்த அல்-ஹாஜ் மௌலவி ஏ. எல் எம் காசீம என்பவர் 15 ஆயிரம் ரூபா பணவுதவி செய்து மீண்டும் வாகனம் சேவையிலீடுபடச் செய்தார். (ப - 14)

### சிற்றூரவை

கொழும்புத்துறை மே 4

தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி யாழ் மாவட்டத்தில் சகல கிராம சேவையாளர் பிரிவுகளிலும் 20 பேர் கொண்ட சபை ஒன்றை அமைத்து அதிலிருந்து எழுவர் கொண்ட சிற்றூரவை குழுவைத் தெரிவு செய்யும்.

சாவகச்சேரி, தனங்கிளப்பு, கொழும்புத்துறை போன்றவற்றில் சிற்றூரவைக்கான குழுக்கள் இவ்வாறு ஏற்கனவே தெரிவாகியுள்ளன. (ப-30)

### புனருத்தாரணம்

வல்வெட்டித்துறை மே 4

சரவெட்டி கிழக்கில் புகழ்வாய்ந்த புராதன ஆலயமான அத்துளு அம்மன் ஆலயம் மூன்று லட்சம் ரூபா செலவில் புனருத்தாரணம் செய்யப்பட்டு வருகின்றது. (இ - 160)

### இலவச பயிற்சி

கோப்பாய் மே 4

கோப்பாய் வடக்கு இளைஞர் கழகத்தினால் இலவசமின் இணைப்பு பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. (இ-79)

### கட்டட திறப்பு விழா

பச்சிலைப்பள்ளி மே 4

பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் ரூபா 40 ஆயிரம் செலவில் தம்பலகாமத்தில் கட்டப்பட்ட கிளைக் கட்டடத்தைசங்கத் தலைவர் ஏ பீ. ஜோர்ஜ் நாளை 5 ஆம் திகதி திறந்து வைப்பார். (இ-117)

### நியமிக்கப்படவில்லை

நெடுந்தீவு மே 4

மாவட்ட வைத்தியசாலை எனத் தரப்படுத்தப்பட்டிருக்கும் நெடுந்தீவு அரசினர் ஆஸ்பத்திரிக்கு நிரந்தர வைத்திய அதிகாரியாக ஒருவரும் இன்னும் நியமிக்கப்படவில்லை. (ப-111)

### நெடுந்தீவில்

நெடுந்தீவு மே 4

இந் நாட்களில் நிலவும் கடும் வெப்பம் காரணமாக நெடுந்தீவிலுள்ள கிணறுகளில் நீர்மட்டம் குறைந்து காணப்படுகிறது

குழாய் நீர் விநியோகம் இல்லாத பகுதிகளில் வசிப்போர் தேவையான அளவு குடிநீரைப் பெறுவதில் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர். (ப 111)

### தடுப்பு மருந்து

கொழும்புத்துறை மே 4

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையச் செயற்குழுவின் முயற்சியை அடுத்து யாழ் கால்நடை வைத்தியர்கள் 66 கால் நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பு மருந்து ஏற்றினர். (ப-30)

### பொதுக் கூட்டம்

யாழ் மாவட்ட சிக்கன சேமிப்புக் கடனுதவி கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் தனது வருடாந்தப் பொதுக் கூட்டத்தை அண்மையில் யாழ். வைத்திஸ்வரா வித்தியாலயத்தில் நடத்தியது. (ப-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**A/L 90 PHYSICS**

திரு. கணேசன் B. Eng.

சடப்பொருளியல்

Properties of Matter

சனி / ஞாயிறு } 12.30

ஆரம்பம்: 05. 05. 1990

**BOND INSTITUTES**

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-4333)



**மகாபொல**

**மகாபொல / உதவிப்பண கொடுப்பனவுகள்**

**(7வது 8வது தவணைப் பணங்கள்)**

பின்வரும் மருத்துவபீட மாணவர்களுக்கு மேற்படி கொடுப்பனவுகளுக்கான ஒழுங்குகள் கீழ்வருமாறு செய்யப்படுகின்றன.

அ. 2ஆம் 4ஆம் வருட மாணவர்கள்;-
07 - 05 - 90 — 9.00 — 12.00
08 - 05 - 90 — 9.00 — 12.00

1ஆம் வருடமாணவர்கள் (உதவிப்பணம் மட்டும்)
11 - 05 - 90 — 1.30 — 3.00

ஆ. 3ஆம் வருட மாணவர்கள்:
04 - 05 - 90
11 - 05 - 90 — 9.00 — 12.00
14 - 05 - 90

இ. 5ஆம் வருட மாணவர்கள்:
04 - 05 - 90
07 - 05 - 90 — 1.30 — 3.00
14 - 05 - 90

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை:

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. 2/- பெறுமதியான முத்திரை
3. உதவிப்பண பதிவேடு
4. தேசிய அடையாள அட்டை

பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்　[சி-4489]


தலைமன்னார் - இராமேஸ்வரம்

## கப்பல் சேவை ஆரம்பிப்பது குறித்து இந்தியா பரிசீலனை

கொழும்பு, மே 4

தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிப்பது பற்றி இந்திய அரசு பரிசீலித்து வருகிறது:

கொழும்பில் உள்ள பிரதி இந்தியத் தூதர் திரு. பி. ராத் கொழும்புச் செய்தியாளர்களிடம் இத்தகவலை தெரிவித்தார்.

''கப்பல் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படுமா?'' என்ற கேள்விக்கு பிரதித் தூதர் திரு. ராத், ''நான் அப்படிச் சொல்லவில்லை. இது விஷயமாக பரிசீலிக்கிறோம் என்று மட்டுமே சொல்ல முடியும்'' - என்றார்.

இதே வேளை-

தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவையை மீண்டும் இந்தியா விரைவில் ஆரம்பிக்கும் என்ற நம்பிக்கையில், தலைமன்னாருக்கு சுங்க, குடியகல்வு அதிகாரிகளை குறுகிய காலத்தில் கொழும்பில் இருந்து அனுப்பி வைக்க இலங்கை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஒ-எ)

## முல்லையில் சிற்றூரவை

முல்லைத்தீவு, மே 4

முல்லை மாவட்டத்தில் ஒவ்வொரு கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவிலும் சிற்றூரவைகளை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் உருவாக்கி உள்ளனர். (இ-92)

## கோப்பாயில் கருத்தரங்கு

கோப்பாய், மே 4

கோப்பாய் பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்கு உட்பட்ட கோப்பாய், நீர்வேலிப் பகுதிகளில் அமைந்துள்ள பேக்கரி, தேநீர்கடை இறைச்சிக்கடை உரிமையாளர்களுக்கும் தொழிலாளருக்கும் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 00 மணிக்கு கோப்பாய் சுகாதரா பணிமனையில் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது. (இ-27]

## பகல் உணவு திட்டம் மறுசிரமைப்பு

அரசாங்கம் எடுத்துள்ள முடிவைஅடுத்து பாடசாலைப் பகல் உணவுத் திட்டம் கடந்த 2ஆம் திகதிதொடக்கம் மறு சிரமைக்கப்பட்டுள்ளது.

இதன்படிஒவ்வொரு நாளும் சமைக்கப்பட்ட உணவை பாடசாலைக்கு எடுத்துச் செல்ல ஒவ்வொரு சிறுவருக்கும் தலா 3 ரூபா பெறுமதியான உணவு முத்திரை வழங்கப்படும்.

கோதுமை மா கொண்டு தயாரிக்கப்பட்ட உணவுக்கு, உணவு முத்திரை வழங்கப்படமாட்டாது'

மாணவர்கள் வீடுகளில் இருந்து எடுக்துச் செல்லும் உணவு பற்றிய சரியான அறிக்கை ஒன்றைப் பெறும்படி வகுப்பு ஆசிரியர்களையும் பிரிவுத் தலைவர்களையும் கேட்டுக் கொள்ளும்படி பாடசாலை அதிபர்கள் பணிக்கப்பட்டுள்ளார்கள். (இ க)

## கவி ஆய்வரங்கும் கவிபடித்தல் நிகழ்ச்சியும்

இந்து சமய கலாசார துணை அமைச்சின் தமிழ் அலுவல்கள் பிரிவினால் இம் மாதம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கவி ஆய்வரங்கும் கவி படித்தல் நிகழ்ச்சியும் நடத்தப்படும்,

இந் நிகழ்ச்சியை இந்து சமய கலாசார துணைஅமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் நெறிப்படுத்துவார்.

''போராட்டமும் கவிதையும்'' என்னும் தலைப்பில் திரு' உ. சேரன், ''ஈழத்துக் கவிதை மரபு'' என்னும் பொருள் பற்றி திரு. ஆ' சிவநேசச்செல்வன், ''நவீன தமிழ்க் கவிதை - சில போக்குகள்'' பற்றி கலாநிதி எம். ஏ. நுஃமான் ''கற்றால் வருமோ கவித்துவம்'' என்னும் தலைப்பில் திரு. சில்லையூர் செல்வராசன் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்குபற்றுவார்கள்.

இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சின் தமிழ் அலுவல்கள் பிரிவு அமைந்திருக்கும் 9 ஆவது மாடி, ''றக்ஷண மந்திரய'', 21, வொக்ஷோல் வீதி, கொழும்பு 2 இல் இந் நிகழ்ச்சி நடைபெறும். (இ-2)

தெமட்டகொடையில்

## வெட்டிக் கொலை செய்யப்பட்ட இளைஞர் சுழிபுரம் வாசி!

கொழும்பு, மே 4

கொழும்பு, தெமட்டகொடைப்பகுதியில்கடந்ததிங்கட்கிழமை இரவு வெட்டிக் கொலை செய்யப்பட்ட சுழிபுரம் வாசி, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுக் கொடுக்கும் முகவராகச் செயற்பட்டவர் என்று கூறப்படுகிறது.

சுழிபுரத்தைச் சேர்ந்த தவசெல்வராஜா வைரமுத்து (வயது 39) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவர் என்று கூறப்படுகிறது. அவருடன் சேர்ந்து வெட்டிக் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் இளம் பெண் யார் என்பது இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

கொலையுண்ட இளைஞர் நீண்ட காலம் கனடாவில் வசித்து வந்தவர் என்றும் —

அண்மையில் இலங்கை திரும்பிய பின்னர் கொழும்பு புறக்கோட்டையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் அலுவலகம் ஒன்றை ஆரம்பித்தார் என்றும் கூறப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை இரவு காரில் வந்த சிலர் இவரைத் தெமட்டகொடையில் உள்ள இவரது நண்பர் ஒருவரின் வீட்டுக்குக் கூட்டிச் செல்வதாகக் கூறி தம்முடன் அழைத்துச் சென்றனர் என்றும் கூறப்பட்டது.

பின்னர் அவர் வெட்டுக் காயங்களுடன் சடலமாகக் கிடக்கக் காணப்பட்டார். (உ)


**மருந்தாளர் [Pharmacist] தேவை**

தகுதியுடைய மருந்தாளர் (Qualified Pharmacist) ஒருவர் உடன் தேவை. அனுபவத்திற்கேற்ற சம்பளம் கொடுக்கப்படும். தகுந்த சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

**லிங் பார்மஸி&குரோசரி**

கே. கே. எஸ். றோட்,
தட்டாதெரு சந்தி,
யாழ்ப்பாணம்.

[C/4373]




இதோ!
அறிமுகமாகின்றது

**அதி சிறந்த மின்சார பல்புகள்**

**BEST BULBS**

**SSS பெஸ்ட் பல்புகள்**




✶ நீடித்த பாவனை
✶ அதி பிரகாச வெளிச்சம்
✶ சிறந்த தரம்
✶ ஐந்து மின் கம்பி கொண்டது

வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு.


விநியோகஸ்தர்கள்:

**N. நாகரெட்ணம் அன் கோ**

62, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-4367)






வீடியோ படப்பிடிப்புத் துறையில் பத்து வருடகால அனுபவம் மிக்க முன்னோடிகளான

**★ புலவர் வீடியோ ★**

நிறுவனத்தினர் புதிதாக அறிமுகப்படுத்துகிறார்கள்

**CHROMA KEY VIDEO MIXER**

**குறோமா கீ வீடியோ மிக்ஸர்**

R. G. P. PRISM SYSTEM PROFESSIONAL QUALITY

★ நவீனத்துவம் ★ கலைத்துவம் ★ தனித்துவம் மிக்க

வீடியோ கலப்பு (MIXING) படப்பிடிப்பு தொழில்நுட்பம்

★ **J. V. C.** ( Colour Special Effects Generator Video Mixer )

★ **C. C. D. Video Camera**


★ **HITACHI** ★ **SONY** ★ **NATIONAL** ★ **J. V. C.**

ஆகிய உலகின் தரம் மிகுந்த கருவிகளின் மூலம் 46 எபெக்ஸ் மிக்ஸரில்
உங்கள் வாழ்வின் நினைவில் நிறைந்த நிகழ்ச்சிகளை நிரந்தர பதிவுகளாக்கி
சிங்கப்பூர், ஹொங்கொங் மற்றும் வெளிநாடுகளின் இயற்கை வண்ணக்காட்சிகள் சேர்த்து
வாழ்நாள் முழுவதும் அதன் உணர்வுகளை அனுபவிக்க வைக்கும்
அற்புதக் கலைப் படைப்புகளாக்கித் தருபவர்கள்......

**★ புலவர் வீடியோ ★**

**கோண்டாவில் வடக்கு,**
**கோண்டாவில்.**

(C/4491)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ வல்லை முத்துமாரி அம்மன் வசந்தோற்சவ விழா மலர் ★

(05 - 05 - 1990)

## பிரதம குரு ஆசிச் செய்தி

அகில புவனங்களை எல்லாம் பரிபாலித்து அருள் நல்கும் இறைவன் இறைவியாகிய தயாநிதியான அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியாய் ஒரு தனி முதல்வியாய் ஒப்பற்றவளாய் ஆதி மந்தியானந்தறசித சச்சிதானந்த சொரூபியாய் பஞ்ச கிருத்திய காரணியாய் பஞ்ச கிருத்தியங்களைச் செய்து வரும் அன்னை பராசக்தியாய் வேண்டுவார் வேண்டுவவெல்லாம் வாரி வழங்கும் ஆயிரம் கண்ணுடையவளாய் வல்லையம் பதியில் கோவில் கொண்டருளி இருக்கும் அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தற்போதைய பரம்பரை அறியாத காலத்தில் தமிழ் நாடு கோடியாக் கரையில் இருந்து வயோதிப மாது வடிவில் வல்லைக்கு வந்து இன்றும் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார்.

சக்தி பீடங்கள் அறுபத்தி நான்கு. காஞ்சியில் காமாட்சியாகவும், காசியில் விசாலாட்சியாகவும், மதுரையில் மீனாட்சியாகவும், நயினையில் நாகபூஷணியாகவும் எழுந்தருளியிருந்து அருள் பாலிக்கும் சர்வலோக நாயகியான உலக மாதா வல்லையில் ஸ்ரீ முத்துமாரி அம்மனாக வீற்றிருந்து உலகை ரட்சிக்கின்றார்.

வருடந்தோறும் சித்திரைப் பௌர்ணமி தினத்தன்று தீர்த்தோற்சவம் வரக் கூடிய தான பதினைந்து நாட்களைக் கொண்ட வருடாந்த மகோற்சவ பெருநாளில் பதினோராம் நாள் வசந்தோற்சவம் மிகமிகச் சிறப்பாக அதிகோலாகலமாக நடைபெறுகின்றது. அன்று அம்மன் சயனத் திருக்கோலத்தில் வசந்தோற்சவ மண்டபத்தில் எழுந்தருளி மன்மத சதி பூஜையையும், சூர்ணோற்சவத்தையும் ஏற்றுக் கொண்டு திருவூஞ்சல் நாயகியாக அகில புவனங்களான சர்வ பிரபஞ்சமும் தனக்குள் அடக்கம் என காட்சி தருகிறார்.

5-5-90 சனிக்கிழமை நடைபெறவிருக்கும் வசந்தோற்சவம் கோலாகலமாக அமைய எல்லாம் வல்ல எம் பெருமாட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மன் அருள்பாலிப்பாராக.

**சோ. தண்டபாணி தேசிகர்**
பிரதமகுரு
ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்,
வல்வெட்டித்துறை.

## நம் பண்பாட்டின் தெய்வீகக் குறியீடு

ஒவ்வொரு பண்பாட்டிலும், அவ்வப் பண்பாட்டு வட்டத்தைச் சேர்ந்தவர்கள் தமது அன்றாடப் பிரச்சினைகளிலிருந்து தம்மை விடுவித்தும் தாம் விடுபட்டும் நிம்மதி நிறைந்த ஓய்வு பெறுவதற்கான வழிமுறைகள் உள்ளுறுத்தப்பட்டிருக்கும்.

தமிழர் பண்பாட்டில் அத்தகைய நிம்மதி நிரம்பிய 'விடுதலை' நாட்கள் இன்று அவ்வவ்வூர்க் கோயில் திருவிழாக்காலமே எனலாம்.

ஒறுப்பு வாதச் சைவம் திருவிழாக்களின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடுவதுண்டெனினும், மக்களைப் பொறுத்த வரையில் (அழ நிலையினர் முதல் மேலோங்கியோர் வரை) கோயில் திருவிழாக்காலம் தான் வருடத்தின் மனம் நிறைந்த ஓய்வுக் காலமாகும்.

ஊர்க்கோயில் கொடியேறினால் கோயிலில் மாத்திரமல்ல ஊரிலும் விழாத்தான். தேர், தீர்த்தம் பசித்திர உணர்வு நிலைப்பட்ட பண்பாட்டு உச்ச வேளைகள்.

மக்கள் தாம் தமக்கு விரும்புவனவற்றையெல்லாம் தெய்வத்துக்குச் செய்து மகிழும் நாட்கள்.

அந்த அற்புத 'பாவனை'களுள் ஒன்று. 'பூங்காவனத் திருவிழா' என நடைமுறைத் தமிழிற் குறிப்பிடப்பெறும் 'வசந்தோற்சவம்' இன்றைக் குத் தெய்வத்துக்கு நாம் செய்வதை, நாளை தெய்வம் நமக்குத் தரும் என்ற பக்தி நிலைப்பாடு இதற்குள் உண்டு.

இந்த விடயத்தில் ஒவ்வொரு ஊரும் தனது தனது சமூகப் பண்பாட்டுத் தனித்துவத்திற்கேற்ப இத்திருவிழாக்களைக் கொண்டாடுவதுண்டு.

வல்லையில் இந்தத் திருவிழாப் பண்பாடு தொழிற்படும் முறைமை தனிக் கவர்ச்சியுடையதாகும்.

வல்லையின் பிரதான மக்கள் குழுமையம் அம்மன் கோயில்தான். சாதாரணமாகவே அம்மனைச் சுற்றிய வாழ்க்கை, திருவிழாக்காலத்தில் அம்மனை விட்டகலா வாழ்க்கையாகி விடுகின்றது.

தமிழர் பண்பாட்டில் விழாக்கள் பெறும் இடத்தை கண்கூடாகவிளக்கிக் கொள்ள விரும்பும் எவரும் வல்லை அம்மன் கோயில் திருவிழாக்களுக்கு வருதல் வேண்டும்.

வல்வெட்டித்துறைப் 'பொடியளுக்கு' எல்லாக் காலத்திலும் ஒரு வரலாற்றுக் கவர்ச்சி முக்கியத்துவம் உண்டு.


அம்மன் கோயில் திருவிழாக்களில் வல்வெட்டித்துறைப் 'பொடியள்' நடத்தும் திருவிழா 'பூங்காவனத் திருவிழாவாகும்.

அந்தத் திருவிழாவின் பொலிவும் கவர்ச்சியும் அற்புதமானவை.

வல்வெட்டித்துறையின் இன்றைய 'பொடியள்' அந்தப் பாரம்பரியத்தை இம்முறை மிக்க கவர்ச்சியுடன் அதே வேளையில் பிரக்ஞைப் பொறுப்புடன் நடத்துகின்றனர்.

திருவிழா வரும் சனியன்று நடைபெறவுள்ளது. அன்று அம்மன் எத்தனை பூரிப்புடன் இருக்கின்றார் என்பதை நீங்கள் பார்க்க வேண்டாமா?

மனிதர் தெய்வத்துடனும், தெய்வ உணர்வு மனிதர் சகலரிடத்தும் சங்கமமாகும் இந்த வேளைகள் நமது பண்பாட்டின் முக்கிய கணங்கள் ★



வல்லை முத்துமாரி அம்மன் ஊஞ்சல் திருக்கோலம்

**பேராசிரியர்**
**கார்த்திகேசு சிவத்தம்பி**

### வல்லை முத்துமாரி அம்மை

தாயே மகமாயி தன்
கருணை வள்ளலே
வல்லைதனில்
கோயில் கொண்டெழுந்
திருக்கும் கோலமுத்து
மாரியம்மே
வாயில் வந்தோ ரெவர்க்
கட்கும் வரமளித்துக்
காத்தருளும்
தாயகமாம்திருப்பாதம்
தாழ்ந்துவணங்கு வனே.

## வசந்தோற்சவ விழா

மங்களகரமான பிரேமதூத ஆண்டில் சித்திரைத் திங்கள் 22 ஆம் நாள் (5 - 5 - 1990) சனிக்கிழமை நடைபெற இருக்கும் வசந்தோற்சவ விழாவின் சிறப்பு நிகழ்ச்சிகள்;

✶ **பகல் நிகழ்ச்சி**

மேளக்கச்சேரி தவில். கானமூர்த்தி பஞ்சமூர்த்தி சகோதரர்கள்.

நாதஸ்வரம். அளவெட்டி என். கே. பத்மநாதன் குழுவினர்.

✶ **இரவு நிகழ்ச்சி**

இலங்கைஒலிஒளி, ரூபவாஹினி புகழ் சூப்பர் சித்தரா குழுவினரின் இன்னிசை விருந்து. பாடகர் கணேசராஜ், பாடகி [illegible] முதலியோர் கலந்து கொள்கின்றனர்;

## தர்மகர்த்தா சபை ஆசிச் செய்தி

சைவமும் தமிழும் ஒருங்கே வளரும் வல்லையம்பதியில் கோடியாக கரையிலிருந்து வந்து கோயில் கொண்டருளியிருக்கும் கோல முத்துமாரி அம்மனுக்கு வசந்தோற்சவம்.

முத்துமாரி அம்மன் கோயிலின் பதினைந்து மகோற்சவ நாட்களும் வல்லை நகரின் விழாவாக கொண்டாடப்படுகின்றன. [பதினொராம் நாளான இன்று அம்பாள் ஊஞ்சலில் சயனித்தவண்ணம் பக்தர்களுக்கு காட்சி கொடுக்கும் அற்புதக் கோலத்தைக் காண ஆயிரம் கண்கள் போதுமா? இப் புனித நன்நாளில் அனுபந்தம் வெளிவருவதையிட்டு எமது தர்மகர்த்தா சபையினர் பெருமகிழ்ச்சி அடைவதோடு, அம்பாள் எல்லா மக்களுக்கும் சகல சௌகரியங்களும்கிநல்கி அருள்பாலிக்க வேண்டுகிறது.

**த. குழந்தைவடிவேல்**
செயலாளர்
தர்மகர்த்தா சபை

## வசந்தோற்சவ விழா

வல்லை வாழ் மக்களுக்கு முத்துமாரி அம்மன் ஒரு காவல் தெய்வம். நோய், பிணி, துயரம் முதலியவற்றிலிருந்து மக்களை பாதுகாக்கும் தெய்வம் முத்துமாரியம்மன் என இவர்களுக்கு நிறைய நம்பிக்கையும் பயபக்தியும் உண்டு. மறுபுறம் வீரம், கல்வி, செல்வம், மன நிறைவு, சந்தோசம் என்பவற்றை அளிப்பவளும் மாதரசி என்று வாழ்த்துகின்ற முத்துமாரியம்மன் என்பதில் இவர்களுக்கு அசையாத நம்பிக்கை உண்டு. அம்மன் கோவிலில் திருவிழா என்றால் வல்லை மாநகரே விழாக் கோலம் பூண்டுவிடும். விழாக்களுக்குள் நிகரற்ற பதினொராம் நாள் வசந்தோற்சவ விழாவின்போது மெய்யடியார்கள் அம்பாளைத் தரிசித்து துன்பங்கள்குறைந்திடவும் இன்பங்கள் நிறைந்திடவும் வேண்டி மெய்யுருகி வழிபட்டால் அம்பாளின் அனுக்கிரகம் கிட்டும். இவ்விழாவினை திறம்பட ஒழுங்கு செய்யும் தன்னலம் கருதா இளைஞர் சமுதாயத்தின் பணிகள் இறைவன் திருவருளால் மென்மேலும் வளர்ச்சியுற வேண்டுமென அம்பாளை இறைஞ்சி நிற்கின்றேன்.

**வேலும்மயிலும்**
உதவி அரசாங்க அதிபர்
பருத்தித்துறை


வசந்தோற்சவத் திருநாளில்
வல்லை முத்துமாரி
★ அருளை வேண்டுகிறோம் ★

★ நம்பிக்கை ✶ நாணயம்
★ நயம் ✶ நல்லபொருள்

நாடுங்கள்:

**அருள் ஜுவலர்ஸ்**
[த. அருளானந்தம்]
வைரமாளிகைக் கட்டடம்,
79, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்

**() மணியம்ஸ் ()**
★ ஜவுளி, ★ பான்சிப் பொருள்கள்
★ மின் தொழில் உபகரணங்கள்
● ஆகியவற்றைப் பெறலாம்
15, ஜுபிலி பசார்.
யாழ்ப்பாணம்,
16, மக்கள் மாதிரி சந்தை,
யாழ்ப்பாணம்.

★ ரி. வி. டெக்,
★ ரேடியோ
★ கசெற் றெக்கோடர்
★ விளையாட்டுப் பொருள்கள்
★ பான்சி பொருள்கள்
★ மின்சார பொருட்கள்
() பெற வாருங்கள் ()

**வாலாம்பிகை ரேடர்ஸ்**
21/5, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

★

**லிங்கம் சில்க் ஹவுஸ்**
18, நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

வசந்தோற்சவத் திருநாளில்
வல்லை முத்துமாரி அருளை
வேண்டுகிறோம்
பலதரப்பட்ட சிறந்த உணவு வகைகளுக்கும்
நீங்கள் நாட வேண்டிய இடம்

★ **ஹோட்டல் பரடைஸ்** ★
91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அடியார்கள் குறை தீர்த்து அமைதியான
வாழ்வு தர வேண்டுகிறோம்
அருள்மிகு வல்லை முத்துமாரி அம்மனே!
திருமண வைபவங்களுக்கேற்ற
மணிப்புரி, காஞ்சிபுரம், கூறைச்சேலைகள்,
ஆடவர் ரசனைக்கேற்ற றெடிமேட் சேட், ரவுசர்கள்,
நவநாகரீக நங்கையர்க்கேற்ற றெடிமேட் ஸ்கேட்
பிளவுஸ் வகைகள் மற்றும்
ஜப்பானிய, இந்திய சாறி வகைகளும்,
சிறுவர் ஆடை வகைகளும்
உங்கள் மனத்திருப்தியுடன் பெற்றுக்கொள்ள
வல்லை மாநகரில் சிறந்த ஸ்தாபனம்

★ **ரிஷி ரெக்ஸ்** ★
யாழ். வீதி, வல்வெட்டித்துறை.

வசந்தோற்சவத் திருநாளில்
வல்லை முத்துமாரி
★ அருளை வேண்டுகிறோம் ★

★ **ஞானம்ஸ்** ★
**டெக்ஸ்டைல்ஸ்**
18 - A, புது மார்க்கெட்,
யாழ்ப்பாணம்.

**ரவி அன் ராஜ்**
**சில்க்ஸ்**
77, பெரியகடை,
"ரகுராமன் கட்டிடம்",
யாழ்ப்பாணம்.

★ **ஐயப்பா** ★
**ரெக்ஸ்ரைல்ஸ்**
<> <>
யாழ். வீதி;
வல்வெட்டித்துறை.

சகல விதமான மருந்து வகைகளும், ஊசிமருந்துகளும்
பால் உணவு வகைகளுக்கும் சிறந்த ஸ்தாபனம்.
ஆர். வி. ஜி மெடிக்கல்ஸ்
உங்கள் தேவைக்கான மருந்து வகைகளை
சில்லறையாகவும், மொத்தமாகவும் குறைந்த விலையில்
பெறுவதற்கு இன்றே நாடுங்கள்:
★ **ஆர். வி. ஜி மெடிக்கல்ஸ்** ★
ஆர். வி. ஜி. மெடிக்கல்ஸ்,
504, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

★ **ஆர். வி. ஜி பீடிகள்** ★
புகை இன்பப் பிரியர்களுக்கு
ஓர் புதுமைச் செய்தி!
அன்றும் இன்றும் என்றும் புகழ் பெற்ற
ஆர். வி. ஜி பீடிகளையே வாங்கிப் பாவியுங்கள்.
ஆர். வி. ஜி. பீடி நிர்வாகம்,
275, பீச் றோட்,
யாழ்ப்பாணம்.
தந்தி: ஆர். வி. ஜி
தொலைபேசி: 22064


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிப்பாய் கோவில் பற்று
ப. நோ. கூ. சங்கம்

## விற்பனை

1. சங்கத்திலுள்ள பாவிக்கப்பட்ட 2'' 1½'' இரும்பு பைப்களை விற்பனை செய்வதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 12 - 05 - 1990 சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

11. சங்கத்தில் உள்ள பாவிக்கப்பட்ட 20 கைத்தறிகள் (கழற்றப்பட்ட நிலையில் உள்ளது) 19-05-1990 சனிக்கிழமை பி. ப. 2.00 மணிக்கு சங்க முன்றலில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். ஏலத்தில் தறிகளைப் பெற்றுக்கொள்வோர் பணத்தை செலுத்தி தறிகளை 19 - 05 - 1990 அன்றே அப்புறப்படுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிட்ட பொருட்களை சங்க வேலை நேரத்தில் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்.
(சி-4487)


★ காஷ்மீர் பிரச்சினை குறித்து

# சிங்குடன் எந்த நேரமும்பேசத் தயார்; பெனாசிர் பூட்டோ அறிவிப்பு!

## ஜப்பான் பிரதமருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில்

இஸ்லாமபாத், மே 3

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியப் பிரதமரைச் சந்திக்க எந்த நேரமும் தயார் என்று பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர் பூட்டோ நேற்று அறிவித்தார்.

ஜப்பான் பிரதமர் கைபுக்கு அளித்த விருந்துபசாரத்தில் கலந்துகொண்டு பேசுகையில் திருமதி பூட்டோ இந்த அறிவிப்பை விடுத்தார்.

காஷ்மீர் பிரச்சினைகுறித்து இந்தியப் பிரதமர் சிங் வெளியிட்ட கருத்து ஒன்றை வரவேற்பதாகவும் திருமதி பூட்டோ அப்போது சொன்னார்.

பாகிஸ்தான் அரசு ஒருபடி முன்னேறி வந்தால் இந்தியா இரண்டுபடி முன்சென்று காஷ்மீர்பிரச்சினைக்குத் தீர்வு காணும் என்று திரு. சிங் அப் பேச்சில் கூறியிருந்தார்.

பாகிஸ்தான் போர் ஒன்றை நடத்தவேண்டும் என்றுவிரும்பவில்லை. சமாதானமாகவே இந்தியாவுடன் வாழ விரும்புகிறது என்றும் பிரதமர்பெனாசிர் சொன்னார்.

ஜப்பான் பிரதமர் கைபு பேசுகையில், இரு நாடுகளும் பொறுமையைக் கடைப்பிடித்து சிம்லா உடன்படிக்கையில் கூறப்பட்டிருக்கும் உணர்வின் அடிப்படையில் பேச்சுக்கள் மூலம் காஷ்மீர்ப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும்படி கேட்டுக்கொண்டார். (எ)

# துவாரகா பீட சங்கரர் கைது; நியாயமானது என அறிவிப்பு!

துவாரகா பீட சங்கராச்சாரிய ஸ்வாமிகள் நேற்று முன்தினம் லக்னோ பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்த முயற்சித்தார் என்ற புகாரின் பேரில் அவர் கைது செய்யப்பட்டார் என்று நேற்று ராஜ்ய சபாவில் உள்துறை அமைச்சர் முப்டி செய்யது முகமது அறிவித்தார்.

ராமஜன்மபூமி தொடர்பாக அவர் பிரசாரஞ் செய்யச் சென்ற சமயமே பொலீஸார் அவரைக் கைது செய்தனர். (எ)

### விருந்துபசாரம்

பிரதமர் டி.பி விஜேதுங்காவைக் கௌரவிக்குமுகமாக புதுடில்லியில் இந்திய வெளியுறவுஅமைச்சர் இந்தர்குமார் குஜ்ரால் நேற்று மதியபோசன விருந்து ஒன்றை அளித்தார்.

# சிறுவனின் உடலில் மின்னும் அதிசய நெருப்புப் பொறிகள்!

பீகிங், மே 3

நான்கு வயதுச் சிறுவன் ஒருவனின் உடலில் முக்கியமான இடங்களில் இருந்து நெருப்புப் பொறிகள் தோன்றுவதாக சீனாவின் உத்தியோகபூர்வ பத்திரிகை, செய்தி வெளியிட்டுள்ளது.

இச்சம்பவம் சீன டாக்டர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளதாம்.

சிறுவனின் பெயர் ரொராங்ஜியாங். சிறுவனின் பாட்டி அவனது உடையிலிருந்து புகை கிளம்புவதைக் கண்டார்.

அதன் பின்னரே அச் சிறுவன் நெருப்புப் பொறி பறக்கும் உடலைக் கொண்டிருப்பது தெரியவந்துள்ளது என்று அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கந்தபிள்ளை சிவனடியான்**
(இளைப்பாறிய யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர்)

மலர்வு: 17 - 10 - 1918
உதிர்வு: 08 : 05 - 1987

திதி:-04 - 05 - 1990

வருஷம் மூன்று மறைந்தும்
எம்மால் உங்களை மறக்கமுடியவில்லை
பண்பாய் எங்களை வளர்த்த
பாசமுள்ள எங்கள் தந்தையே
நீங்கள் காட்டிய பாதையில்
நாங்கள் இன்று வாழ்கிறோம்
உங்கள் பிரிவு எம்மை வாட்டுவதை
உங்கள் ஆத்மா அறிந்து சாந்தியடைய.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தயா சிவனடியான் குடும்பம்,
24, பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில்.
(3396)



## 4ஆம் ஆண்டு நினைவு தினம்



அமரர்
**நாகலிங்கம் இளையதம்பி**

தோற்றம்:- 21- 07- 1911
மறைவு:- 19- 04- 1986

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டும்:

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சுன்னாகம் மேற்கு.
சுன்னாகம்.
(12392)



## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
**திரு. வைத்திலிங்கம் இராமசாமி**
(சின்னத்துரை)
(உத்தரவு பெற்ற வர்த்தகர் A. D.)

தோற்றம்: 31 - 07 - 1910
மறைவு: 15 - 04 - 1989

பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய் விளங்கிய எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு நீங்காது. உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''ஜோதிஸ்தான்''
23. செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
(3382)


### கூட்டம் புதுடில்லியில் ஆரம்பம்

புதுடில்லி, மே 03

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 23 ஆவது வருடாந்தக் கூட்டம் நேற்று புதுடில்லியில் பிரதமர் வி. பி. சிங்கால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

49 நாடுகளைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரம் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். (எ)

### புதுடில்லியில் தீவிரவாதி கைதி

புதுடில்லி, மே 03

புதுடில்லியில் காஷ்மீர் தீவிரவாதபிரமுகர் ஒருவரை பொலீஸார் நேற்று கைது செய்தனர்.

அவரது பெயர் ஷாகிர் அஹ்மத். புதுடில்லியில் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்து கொண்டு காஷ்மீரில் செயல்படும். தீவிரவாதிகளுக்கு இவர் தொலைபேசி மூலம் 'கட்டளை' பிறப்பித்து வந்தராம். (எ)

### கொலம்பியா ஜனாதிபதித் தேர்தல்

பெகொடா, மே3

கொலம்பியாவின் ஜனாதிபதி தேர்தல் இம்மாதம் 27 ஆம் திகதி நடைபெற உள்ளது.

இத்தேர்தலில் போட்டியிட வேட்புமனுத்தாக்கல் செய்த வேட்பாளர்களில் மூவரை போதைக் கடத்தல்காரர்கள் கொன்று விட்டனர்.

ஓர் இடதுசாரி வேட்பாளர் தலைமறைவாகி விட்டார். (எ)

### பயணக்கைதி விடுதலை பற்றி அதிபர் புஷ்

வாஷிங்டன், மே 03

அமெரிக்கப்பயணக் கைதிகளை அரபு தீவிரவாதிகள் விடுதலை செய்வதற்காக ஈரானுக்கும், சிரியாவுக்கும் சன்மானம் எதையும் வழங்கப் போவது இல்லை என்று. அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்தார்.

அந்த நாடுகளுக்கு நன்றி மட்டுமே தெரிவிப்பதாகவும் அவர் சொன்னார். (எ)


குமுலுஸ் D.F. போட்டி


# BASF
# குமுலுஸ் D.F.


பாவித்து மிளகாய் செய்கையில் அதிக விளைவு பெறுவதோடு பரிசுகளையும் பெறுங்கள்

| | |
|---|---|
| நப்சாக் தெளி கருவி — | 5 |
| ஸ்போட்ஸ் துவிச்சக்கர வண்டி — | 5 |
| கைத்தெளி கருவி — | 5 |
| சிறிய வானொலிப்பெட்டி — | 20 |
| எவரெடி ரோச் லைற் — | 48 |
| ரீ சேட் — | 100 |

மிகவும் இலகுவாக இந்த போட்டியில் பங்குபற்றலாம். நீங்கள் செய்ய வேண்டியது.

1. கீழேயுள்ள கூப்பனை அல்லது குமுலுஸ் DF பைக்கற்றுகளிலுள்ள கூப்பனை நிரப்பி, குமுலுஸ் பைக்கற்றுகளின் மேல்பகுதியை வெட்டி ஒவ்வொரு கூப்பனுடனும் 5 குமுலுஸ் மேல்பகுதிகளை சேர்த்து, பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ் (பிரைவேட்) லிமிட்டெட், 186 வக்சோல் வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். ஒருவர் பலமுறை அனுப்பலாம்.
2. தபாலுறையின் இடதுபக்க மேல்பகுதியில் ''குமுலுஸ் DF போட்டி'' என எழுதவும்.
3. போட்டியின் முடிவு திகதி 30-06-1990
4. போட்டியின் அதிஸ்டசாலிகளின் பெயர்கள் பத்திரிகை மூலமும் கடிதம் மூலமும் அறிவிக்கப்படும்.
5. பின்லே கெமிக்கல்ஸ் ஊழியர்களும், பெஸ்ற் அன் போவேட் லிமிட்டெட் ஊழியர்களும் இந்த போட்டியில் பங்குபற்றமுடியாது.




FINCHEM AGRO DIVISION
பின்லே கெமிக்கல்ஸ் அன் டையிஸ் (பிரைவெட்) லிமிட்டெட்
(விவசாய இரசாயன பகுதி)
186. வக்சோல் வீதி. கொழும்பு 2.

பெயர் ______
முகவரி ______
______
வியாபாரியின் பெயர் ______
______
முகவரி ______
______

Licence No S/731

பீடை நாசினிகள் அபாயகரமானவை. அவதானமாக பாவிக்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத் தொழிலாளர்களை திருப்பி அனுப்புவது பற்றி

# இந்தியாவுடன் இலங்கை அரசு புதிதாகப் பேச்சு நடத்த வேண்டும்

## துணை அமைச்சர் செல்லச்சாமி கோரிக்கை

கொழும்பு மே, 4

மலையகத்தில் உள்ள ஒரு லட்சம் இந்தியப் பிரசைகளான தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்புவது குறித்து இந்தியாவுடன் இலங்கைத் அரசு புதிதாக பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டும்.

இப்படி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இலங்கை அரசைக் கேட்டுள்ளது.

இ. தொ. கா. பொதுச் செயலாளரும் துணை அமைச்சருமான திரு. எம். எஸ். செல்லச்சாமி இத் தகவலை வெளியிட்டார்.

"இந்த மனிதப் பிரச்சினையை புதிய பார்வையில் அணுக வேண்டும். தோட்டத் தொழிலாளர் துன்பப்படுபவர்கள். அவர்களின் நிலைமை கருத்திற்கு எடுக்கப்பட வேண்டும்" — என்று சொன்னார் திரு. செல்லச்சாமி.

இந்தியப் பிரசா உரிமை பெற்ற தொழிலாளரை இந்தியாவுக்கு திருப்பி அனுப்புவதை இ. தொ. கா. எதிர்க்கிறதா? என்ற கேள்விக்குப் பதிலாக திரு. செல்லச்சாமி, "இப் பிரச்சினை குறித்து புதிதாகப் பேச்சுக்கள் நடத்த வேண்டும். இது ஒரு நீண்ட காலப் பிரச்சினை" —என்று சொன்னார்.

திரு. செல்லச்சாமி மேலும் சொன்னதாவது;

இந்தியப் பிரசைகளைத் தாயகம் திருப்பி அனுப்பும் உடன்பாடு மக்களைக் கலந்தாலோசியாமல் செய்யப்பட்டதாகும்.

இந்தப் பிரச்சினை குறித்து சரியான பேச்சுக்களை நடத்தாமல் அவர்களைத் திருப்பி அனுப்ப முடியாது.

தாயகம் திருப்பி அனுப்பப்படும் இந்தியப் பிரசைகளின் சரியான எண்ணிக்கை பற்றி இ. தொ. காவுக்கு எதுவும் தெரியாது.

இந்த விஷயத்தை ஜனாதிபதியுடன் பேசித் தீர்வுகாண முடியும் என்று இ. தொ. க நம்புகிறது. என்று துணை அமைச்சர் திரு. செல்லச்சாமி சொன்னார். (ஒ-எ)

### சமாதானத்தை---:

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது. இந்த உணர்வு விடுதலைப் போராட்டத்தின் வழியே திசை திருப்பப்பட வேண்டும்.

இந்தச் சமூகத்தைச்சேர்ந்தவர்களிடம் இருக்கும் அளப்பரிய திறமை சமூகத்துக்கு உகந்த விதத்தில் சரிய கப் பாவிக்கப்படவேண்டும்.

கசிப்பு மற்றும் குடிவகைகளுக்கு அவர்கள் அடிமையாகி அவர்கள் வாழ்வு சீரழிகின்றது என்றால் அதிகாரிகள் எல்லோரும் வெறுமனே அதைப் பார்த்துக் கொண்டிருப்பது சரியா? அவர்களை நல்வழிப்படுத்த முயற்சி எடுங்கள். அவர்களுக்கு வழிகாட்டுங்கள்.

அவர்களுக்கு உரிய கல்வி வசதி' சுகாதாரவசதி மற்றும் சமூகதேவை சரியானமுறையில் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

அவர்களிடமிருந்துகுறைந்த விலைக்கு கடல் உணவுகளை வாங்கி அதிக விலைக்கு விற்று ஒரு சிலர் லாபம் ஈட்டுகின்றனர். இதனால் இந்த சமூகத்தவர்கள் சுரண்டப்படுகின்றனர்.

அவர்களின் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் அவர்களுக்கு கிடைப்பதை நாம் உறுதி செய்யவேண்டும் — என்றார்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில்

# கடத்தலை முறியடிக்க விசேட பொலீஸ் பிரிவு

கொழும்பு, மே 4

கடத்தல் மற்றும் பயண தஸ்தாவேஜு மோசடிகளைக் கண்டுபிடிக்க கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் விசேட இரகசியப் பொலீஸ் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

புதிய பிரிவின் பொறுப்பதிகாரியாக உதவிப் பொலீஸ் அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கடந்த ஆறு மாதங்களில் நாட்டுக்குள் 100கிலோகிறாம் தங்கத்தைக் கடத்த எடுத்த முயற்சிகளை சுங்க அதிகாரிகள் தடுத்திருந்தனர். இத்தங்கத்தின் பெறுமதி 5 கோடி 29 லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில் மட்டும் ஒரு கோடி 56 லட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தைக் கடத்த எடுக்கப்பட்ட முயற்சிகளையும் சுங்க அதிகாரிகள் முறியடித்திருந்தனர். (ஒ எ)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## திரு. தம்பு இரத்தினம்

(இளைப்பாறிய ஆசிரியர் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி)

மலர்வு: 12-01-1921

மறைவு: 05-04-1990

திதி:- 05 - 05 - 1990

அன்னாரது இல்லத்தில் 05 - 05 - 1990 (சனிக்கிழமை) அன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் பங்குபற்றுமாறு நண்பர்களையும், உறவினர்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்

மக்கள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.

(13019)

### தமிழ்த் தின- - -

எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கும்படி பணிக்கப்பட்டுள்ளது.

பின்னர் மாகாண ரீதியாக நடைபெறும் போட்டிகளில் தெரிவு செய்யப்படுவோர் தேசிய ரீதியான போட்டிகளுக்குத் தெரிவாவர்.

வாசிப்பு, எழுத்து, ஆக்கம், பா ஓதல், இசை, நடனம், நாடகம் ஆகிய துறைகளில் போட்டிகள் நடாத்தப்படும்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள மாவட்டங்களில் இதுவரை யாழ் மாவட்டம் மட்டுமே பிரஸ்தாப போட்டிகளை நடத்தியுள்ளது. (ஒ-9)

### வரதர்- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வோம்.

திரு. வரதராஜப்பெருமாள் நாடு திரும்பினால் "தமிழீழப் பிரகடனம்" செய்ததற்காக அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

கேள்வி:- அவருடன் சேர்த்து மாகாண சபையில் அங்கம் வகித்த ஏனைய உறுப்பினர்கள், மாகாண சபையின் அமைச்சர்கள் மற்றும் அவர்கள் சார்ந்த கட்சியின் எம். பிக்கள் தற்போது கொழும்பில் தானே தங்கியிருக்கிறார்கள் அவர்கள் மீதும் நடவடிக்கை எடுப்பீர்களா?

ரஞ்சன்:- தமிழீழப் பிரகடனம் செய்யப்பட்டதற்கு வரதராஜப்பெருமாள் தான் சூத்திரதாரி. அவர்மீது தான் முதலில் நடவடிக்கை எடுக்கவேண்டும்

"தமிழீழப் பிரகடனம்" செய்தது ஒரு தேசத்துரோகக் குற்றம். அதைச் செய்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும். தாம் செய்த செயலுக்கு உரிய விளைவை அவர்கள் அனுபவிக்க வேண்டியிருக்கும் – என்றார். (அ உ-எ)

### பயிலுனர் ஆசிரியர்- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்து சேருவார் என எதிர்பார்க்கப்படுகிறது அவர் வந்து சேர்ந்ததும் பரிசீலனை ஆரம்பமாகும் என அறிய வருகிறது

இந்தத் தெரிவுகளில் இடம் பெற்றதாகக் கூறப்படும் தில்லுமுல்லுகள் குறித்து விசாரிக்க குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட உள்ளது.

இந்தக் குழுவுக்கு வன்னிப் பகுதியின் கல்விப் பணிப்பாளர் ஒருவர் தலைமை வகிப்பார். வடமராட்சிப் பகுதியின் பிரபல பாடசாலை அதிபர் ஒருவரும் வலிகாமம் பகுதியின் கொத்தணி அதிபர் ஒருவரும் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய பிரமுகர் ஒருவரும் இக்குழுவில் இடம்பெறுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

## தமிழர்கள் எழுவர் கைது!

கொழும்பு, மே 4

இலங்கைத் தமிழர்களான ஆறு ஆண்களும் ஒரு பெண்ணும் மோசடி செய்யப்பட்ட விஸாக்களைப் பாவித்து அம்ஸ்டர்டாமுக்குச் செல்ல முயற்சித்த போது கைது செய்யப்பட்டனர்.

கட்டுநாயக்காவில் வைத்து எயர்லங்கா பாதுகாப்பு அதிகாரிகள் இவர்களைக் கைது செய்தனர்.

கடந்த வாரம் இச்சம்பவம் இடம் பெற்றது.

பொலீஸார் சந்தேக நபர்களை நீர்கொழும்பு நீதிவான் முன் ஆஜர்செய்தனர். (ஒ - எ)

## ஈஸ்வராம்பா நினைவு விழா சிறுவர் தினம்

யாழ்ப்பாணம், மே 4

பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியின் பாலவிகாஸ் மாணவ மாணவிகளின் ஈஸ்வராம்பா நினைவு விழா சிறுவர்தினம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

திருநெல்வேலி தெற்கு சேர். பொன். இராமநாதன் வீதி பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமித்தி மண்டபத்தில் விழா நடைபெற உள்ளது. (இ)

### புலிகள் ஆயுத---

1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் காலக்கிரமத்தில் இராணுவம், பொலீஸ் என்பனவற்றில் சேர்ந்து கொண்டு தங்கள் வசமுள்ள ஆயுதங்களைத் தாங்களாகவே ஒப்படைத்து விடுவர் என்று பத்திரிகைகளுக்கும் பொதுமக்களுக்கும் அரசு அறிவித்து வரும் காரணம் இதுதான்.

சொந்தப் பாதுகாப்புக் கருதி சொற்பகாலம் ஆயுதங்களை வைத்திருக்க விடும்படி விடுதலைப்புலிகள் தரப்பினர் கேட்டிருக்கிறார்கள்.

தமிழ் தேசிய இராணுவத்தினர் இன்னமும் பல இடங்களில் மறைந்து இருந்து சேதங்களையும் குழப்பங்களையும் விளைவித்து வருகிறார்கள்.

ஈ. பி. ஆர் எல். எவ். இயக்கத்தினர் தொடர்ந்தும் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவார்களேயானால் அவர்களுக்கு எதிராக அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் — இப்படி அமைச்சர் தெரிவித்தார். [அ-எ]

### இந்தியப் பிரசை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது இப்படிக் கூறுவது அழகல்ல.

**ஒரிஸாவிலிருந்து வந்தால் பாதுகாப்பு**

ஒரிஸா சென்றுள்ள இலங்கையர் விவகாரத்தையும், இந்தியப் பிரசைகள் ஒப்பந்தத்தின் பிரகாரம் தாயகம் திரும்புவதையும் ஒப்பிடக் கூடாது. இலங்கையிலிருந்து சென்றவர்கள்தாமாகச் சென்றவர்கள். இலங்கை அரசு அவர்களைப் போகச் சொல்லவில்லை. அவர்கள் தாமாகப் போனவர்கள். அவர்களை இந்தியா ஏற்றுக்கொண்டது. ஒரிஸாவில் உள்ள இலங்கையர்கள் இங்கு திரும்பி வருவதானால்அவர்களுக்குபோதிய பாதுகாப்பு வழங்கப்படும். (அ-எ)

### புலிகள் தடுத்து. . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் உயர் பிரதிநிதிகளுடன் நேற்று பேச்சுவார்த்தைநடத்தியதை அடுத்து தடுத்து வைக்கப்பட்டோர் விடுவிக்கப்பட்டனர்.

சிப்பாய்கள் காரணமின்றி நடமாடியது தவறு என இராணுவ அதிகாரிகள் விடுதலைப் புலிகளிடம் ஒப்புக்கொண்டதகவும் தெரியவருகிறது. (உ)

### முன் நிபந்தனை- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துமா? என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் —

இந்தியா தனது சுதந்திரத்தைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் அனைத்தையும் எடுக்கும் என்றும் திரு. குஜ்ரால் சொன்னார்.

(மேலும் ... செய்தி 8 ஆம் பக்கத்தில்) (ஒ-எ)

ரூபா 15 லட்சம் பெறுமதியான

# தங்கம் கோடிக்கரையில் மீட்பு! காங்கேசன்வாசிகள் இருவர் கைது!!

வேதாரண்யம் மே 4

இலங்கை நாணயப்படி சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தைக் கடத்த முயன்ற இருகாங்கேசன்துறைவாசிகளை கோடிக்கரைப் பகுதியில் வைத்து கடந்த சனியன்று நாகப்பட்டினம்,வேதாரண்யம் பகுதி சுங்க அதிகாரிகள் கைது செய்தனர்.

தேவன் (வயது 25), அபலன் ராசன் (வயது20) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்களிடமிருந்து இரண்டு கிலோ எடையுள்ள 16 தங்கக் கட்டிகள் சுங்க அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டன.

கோடிக்கரை மீன்பிடித் துறைமுகத்துக்கு மேற்கே ஒரு மைல் தூரத்தில் மீனவர்கள் போல் மாறுவேடத்தில் மீன் பிடித்துக்கொண்டிருந்த தமிழக சுங்க அதிகாரிகளே இவர்களைக் கைது செய்ததாகக் கூறப்பட்டது.

இலங்கையிலிருந்து வந்ததாகக் கருதப்படும் படகு ஒன்றை கோடிக்கரைப் பகுதியில் மார்பளவு உயரத் தண்ணீரில் நிறுத்திவிட்டு அதிலிருந்து இருவர் இறங்கி கரையை நோக்கிச் சென்றதாகவும்—

அவர்களை வழிமறித்து, அவர்கள் வந்த படகை சுங்க அதிகாரிகள் சோதனையிட்டு தங்கக் கட்டிகளை மீட்டனர் என்றும் கூறப்பட்டது.[உ]

## சந்தை விலைகள்

சுன்னாகம், யாழ்ப்பாணம், திருநெல்வேலி சந்தைகளில் நேற்றைய மரக்கறி விலைகள் — கிலோ அடிப்படையில்;

| | சுன்னாகம்: | திருநெல்வேலி | யாழ்ப்பாணம்: |
|---|---|---|---|
| கத்தரி | ரூ. 10.00-12.00 | ரூ. 12.00-14.00 | ரூ. 12.00-16.00 |
| வாழைக்காய் | ரூ. 6.00- 9.00 | ரூ. 3.00- 4.50 | ரூ. 6.00- 8.00 |
| பயிற்றங்காய் | ரூ. 10.00-12.00 | ரூ. 7.00-12.00 | ரூ. 12.00-16.00 |
| பாகற்காய் | ரூ. 10.00-12.00 | ரூ. 9.00-11.00 | ரூ. 12.00-16.00 |
| கோவா | ரூ. 11.00 12.00 | ரூ. 10.00-14.00 | ரூ. 12.00-14.00 |
| லீக்ஸ் | ரூ. 20.00-22.00 | ரூ. 19.00-22.00 | ரூ. 20.00-24.00 |
| கரட் (மலைநாடு) | ரூ. 20.00-22.00 | ரூ. 20.00-23.00 | ரூ. 20.00-24.00 |
| பீற்றூட் | ரூ. 6.00- 8.00 | ரூ. 7.00- 9.00 | ரூ. 8.00-10.00 |
| பீன்ஸ் | ரூ. 18.00-20.00 | ரூ. 17.00-21.00 | ரூ. 20.00-22.00 |
| பூசணி | ரூ. 4.00- 5.00 | ரூ. 3.00- 3.50 | ரூ. 5.00- 6.00 |
| பச்சைமிளகாய் | ரூ. 12.00-14.00 | ரூ. 9.00-12.00 | ரூ. 14.00-16.00 |
| வெங்காயம் | ரூ. 20.00-28.00 | ரூ. 18.00-29.00 | ரூ. 22.00-28.00 |
| உருளைக்கிழங்கு | ரூ. 28.00-30.00 | ரூ. 29.00-30.60 | ரூ. 28.00-30.00 |
| மரவள்ளிக்கிழங்கு | ரூ. 6.00- 7.00 | ரூ. 6.00- 7.00 | ரூ. 6.00- 8.00 |
| வெண்டைக்காய் | ரூ. 12.00-14.00 | ரூ. 10.00-13.00 | ரூ. 10.00-16.00 |
| செத்தல்மிளகாய் | ரூ. 58.00-60.00 | ரூ. 57.00-59.00 | ரூ. 60.00-65.00 |

# ஒரிஸ்ஸாவிலிருந்து தப்பிய 7 பேருக்கு கடுங்காவல் சிறை

சென்னை, மே 4

ஒரிஸ்ஸா, கோரப்பூர் மாவட்டத்திலுள்ள தமிழ் அகதிகள் 7 பேர் அங்கிருந்து தப்பி நேற்று வேதாரணியம் வந்தபோது தமிழ் நாட்டுக் கரையோர காவற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்கள் 7 பேரும் நீதி மன்றத்தில் உடனடியாக ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களுக்கு 15 நாள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த 7 பேருடன் இதுவரையில் 145 இலங்கைத் தமிழ் அகதிகள் ஒரிஸாவிலிருந்து தபபி வந்தபோது கைதுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இந்தியாவில் மொத்தம், 91 539 இலங்கை அகதிகள் தங்கியிருப்பதாக இந்திய லோக சபையில் உள்துறை இணை அமைச்சர் தகவல் வெளியிட்டார். (ஒ-9)

### தடை நீக்கம்

வாஷிங்டன், மே 4

சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் தொழில் நுட்ப உதவிகள் பெறுவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை அமெரிக்கா நீக்கிவிட்டது. (எ)

# திருமணம் செய்தோருக்கு நீண்ட ஆயுளாம்!

வாஷிங்டன் மே 4

திருமணம் செய்தவர்களே நீண்ட காலம் வாழ்கிறார்கள் என்று கூறும் புதிய ஆய்வு ஒன்றை அமெரிக்க சஞ்சிகை ஒன்று வெளியிட்டு உள்ளது.

கைத்தொழில் வளர்ச்சி பெற்ற 16 நாடுகளில் 1940 முதல் நடத்தப்பட்டு வரும் ஆய்வுகளின் போது இப்புதிய உண்மை கண்டுபிடிக்கப்பட்டதாக அச்சஞ்சிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

தனிமையில் அல்லது விவாகரத்துச் செய்துவிட்டு வாழ்பவர்களை துன்பம் வாட்டுகிறது. அதனால் திருமணமானவர்களின் வாழ்நாளிலும் பார்க்க குறைந்த காலமே அவர்கள் வாழ்கிறார்கள்.

திருமணம் செய்வதால் ஆரோக்கியம் பேணப்படுகிறது குறைந்த வயதில் உயிரிழக்கும் ஆபத்து குறைகிறது — என்று அந்தச் சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

# கைபு - பிரேமா நேற்று இரண்டு சுற்றுப் பேச்சு

கொழும்பு, மே 4

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஜப்பானியப் பிரதமர் திரு. தொஷிகி கைபு, ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவுடன் நேற்று இரண்டு சுற்றுப் பேச்சுக்களை நடத்தினார்.

பொருளாதார, தொழில் நுட்ப உதவிகள் குறித்தே நேற்றைய பேச்சுக்கள் அமைந்திருந்ததாக அறியவந்தது

ஜப்பானியப் பிரதமருடன், அவரது மனைவி திருமதி சஷியோ கைபுவும் மகள் மிட்சுபு கைபுவும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

அவர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நேற்று வந்திறங்கியபோது பிரதமர் திரு. டி. பி. விஜேதுங்காவும் பரிவாரமும் வரவேற்றனர் அங்கிருந்து விசேட ஹெலிக்கொப்டர் மூலம் இராணுவ மைதானத்தில் வந்திறங்கினர் அங்கிருந்து பின்னர் ஹில்டன் ஹோட்டலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

சங்கிநந்துராஜ ஙக விருந்தினர்கள் மூவரும் ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (அ)

### புகைப்பவர்களுக்கு தண்டனை

டப்ளின், மே 3

பொது இடங்களில் புகைபிடிக்கும் சட்டத்தை மீறுபவர்களைப் பிடித்து அபராதம் விதிக்கும் சட்டத்தை அயர்லாந்து அரசாங்கம் தீவிரமாகஅமுல்நடத்தத் தொடங்கியது

# இந்திய - இலங்கை கடல்எல்லைவரையறுக்கப்படும்

## திட்டம் பரிசீலனையில் எனத் தகவல்

புதுடில்லி, மே 4

இந்தியவுக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள கடல் எல்லை வரம்பு வரையறுக்கப்படும் இதற்கான பல்வேறு திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு வருவதாக நேற்று இந்திய நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

வெளிவிவகார அமைச்சர் இந்தர்குமார் குஜ்ரால் இந்த தகவலை வெளியிட்டார்.

இலங்கை, பர்மா, திபெத் நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 2 லட்சத்து 30 ஆயிரம் அகதிகள் இந்தியாவில் தங்கியுள்ளதாயும்,

அவர்களில் இலங்கை அகதிகள் 91 ஆயிரத்து 539 பேர் என்றும் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய உள்துறை இணையமைச்சர் எஸ். கே. சகான் குறிப்பிட்டார்.

பயிலுநர் ஆசிரியர்களுக்கான

# இரண்டாம் கட்டப் பயிற்சி நாளை முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 4

யாழ் மாவட்டத்தில் பயிலுனர் ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான இரண்டாம் கட்டசேவைக்காலப் பயிற்சி நாளை சனிக்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி 12 நிலையங்களிலும் பயிற்சி நடைபெறும் என்றும் குறித்த நேரத்திற்கு விரிவுரையாளர்களும், ஆசிரியர்களும் சமூகம் தரும்படியும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. [ஓ-9]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

15 கிறாம்
அண்ணா கோப்பி
100 வீதம் சுத்தமானது
இது கைதேர்ந்த தொழிலாளர் களினால் சாற்றுப் புராவண்ணம் அடைக் கப்பட்ட பைக்கட்டுகளில் வெளிவருகிறது. இதை வாங்கிப் பாவித்து.
இதன் வெற்றுப் பைக்கட்டுகள் 25 கொடுத்து ஒரு அப்பியாசக்கொப்பியை இனாமாகப் பெற்றுக் கொள்ளவும்.

# உதயன்

04 - 05 - 1990 வெள்ளிக்கிழமை

பாடசாலைப் பிள்ளைகளின் மதிய உணவுத் திட்டத்திற்கு உகந்தது.
“ ஜீவாகாரம் ”
இதில் தேவையான அளவு கலோரி, புரதம், விற்றமின், தாதுப்பொருட்கள் அடங்கி உள்ளன.
அண்ணா தொழிலகம்
இணுவில்.

## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் விஜெயரட்ணம்
[பெரியதம்பி]

கொய்யாத்தோட்டம் புது வீதியைச் சேர்ந்த காலஞ் சென்ற பொன்னம்பலம், விசாலாட்சி தம்பதி களின் சிரேஷ்ட புதல்வன் திரு. பொன்னம்பலம் விஜெயரட்ணம் (பெரியதம்பி) 29-04-1990 இல் காலமானார். அன்னார் ஓய்வு பெற்ற விவசாயத் திணைக்கள களஞ்சியப் பொறுப்பாளரும், ஈச்ச மோட்டையை வசிப்பிடமாக கொண்டவரும், யோகம் மாவின் அன்புக் கணவரும், பொன்னுத்துரை (ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்), முத்துக்குமார சாமி (ஓய்வு பெற்ற சுகாதாரப் பரிசோதகர்), ஆனந்த குமாரசாமி (சுவிஸ்), புனிதவதி, பாலசிங்கம் (பிரான்ஸ்), பூபதி (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ராஜேந்திரம் (ஜேர்மனி), புஸ்பம் (பிரான்ஸ்), புஸ்பமலர் (பிரான்ஸ்), புஸ்பவதனம், ரவிச்சந்திரன் (பிரான்ஸ்), ரவீந்திரன் (நோர்வே), புஸ்பலதா, புஸ்பமாலா, ரவிக்குமார், ஜெயசுதா (ARK உடுவில்) ஆகியோரின் தந்தையும் துவாரகா விலாசினி (ஜேர்மனி), சுகுமாரன் (பிரான்ஸ்), நாகேந் திரம் (பிரான்ஸ்), தர்மலிங்கம் (ஆசிரியர், கார்மேல் பாத்திமா கல்லூரி, கல்முனை), ஆனந்தி (நோர்வே) ஆகியோரின் மாமனாரும், இரத்தினசிங்கம் (ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்), கனகம்மா, பாரதாதேவி (ஆசிரியை, மானிப்பாய், மகளிர் கல்லூரி), மகேஸ்வரி, ஆனந்தராசா (கனடா), கன காம்பிகை, குணசீலன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத் துனரும், தாரணி, உமையாள், அவந்திக்கா, சுபத்ரா இரேக்காந்த், பிருந்தா, விஜெயராஜ், ஆர்த்திக்கா லக்ஷி ஆகியோரின் பேரனுமாவார்.

இறுதிக் கிரியைகள் 05-05-90 சனிக்கிழமை பிற் பகல் 3.30 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியை கொழும்புத்துறை துண்டி மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இரா. தர்மலிங்கம்
1/1, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம். (3502)

### திருமதி நாகரத்தினம் ஜெயராசா
(இளைப்பாறிய சுப்பவைசர் மத்திய தொலைபேசித் திணைக்களம், கொழும்பு.)

திருமதி நாகரத்தினம் காலமானார். அன்னார் உப்புமடம் கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த காலஞ் சென்ற வைத்திலிங்கம் அன்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் திரு ஜெயராசா [Happy House, Manippay] அவர்களின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற இராசரட்ணம் [மலேஷியா], திரு. தேவராசா [சம்பியன் லேன், கொக்குவில்], திருமதி அன்னலட்சுமி சிவசம்பு [கொட்டாஞ்சேனை] அவர்களின் சகோதரி யும், திருமதி நந்தினி பிரேம்குமார் [றோயல் பார்மஸி] அவர்களின் வளர்ப்புத் தாயாரும். திரு. சிறீகாந் தன் [பாபு; மே. ஜேர்மனி] அவர்களின் வளர்ப்பு மாமியாருமாவார். அன்னாரின் பூதவுடல் 3 – 5 – 90 அன்று செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப் பட்டு தகனம் செய்யப்பட்டதென்பதை யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
ஜெயராசா (கணவன்),
39, செட்டித் தெரு,
நல்லூர்.
(சி/4368)

### திருமதி மதனாம்பாள் பாலசிங்கம்

328, பருத்தித்துறை வீதி, நல்லூரைச் சேர்ந்த திருமதி மதனாம்பாள் பாலசிங்கம் காலமானார்.

அன்னார் ஓய்வுபெற்ற லிகிதர் பாலசிங்கத்தின் அன்பு மனைவியும், மேனகா, ரஞ்சனா, மனோகரன் ஆகியோரின் அன்புத் தயாரும், தனபாலசிங்கத்தின் (சவுதி) அன்பு மாமியாரும், விஜயாம்பாள், காலஞ் சென்ற ஜெயசிங்கம் ஆகியோரின் சகோதரியும், ஜெய சீலன் (யாழ். இந்துக் கல்லூரி), கவிதா (யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேத்தியு மாவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (04-05-1990) மாலை 3-00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள் கிறோம்.

தகவல்:
க. பாலசிங்கம்
[3505]

### திருமதி ஆநந்தர் செல்லம்மா

யாழ்ப்பாணம் கந்தர்மடவாசியாகிய ஆநந்தர் செல்லம்மா லண்டனில் 03-05-1990 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா ஆநந்தரின் (R.M.P) அன்பு மனைவியும், இந்திராணி, இந்திர சேனன் (U.K), மீனலோஜனி, இரவீந்திரன் (U.K), நகுலேந்திரன் (U.K) ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகசபை, மாதவாம்பிகை, அமிர்தலிங்கம், சாரதா தேவி, யோகராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், நிர்மலா, கமலநாதன், சிவநாதன், செல்வநாதன், ஆநந்தசேனன், நதிரா, தேவசேனன், மாலினி, லதா, அருணன், கீதா, ரீனா, டானியல், யோகான் ஆகி யோரின் பேத்தியும், நிவேதிதாவின் பூட்டியும், இராசம்மாவின் சகோதரியும், கதிரவேலுவின் மைத் துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 06-05-1990 ஞாயிற்றுக்கிழமை No. 8, South War North Harrow, Middlesex, HA2 6FP England இல் நடைபெறும்.

69, பழம் றோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
தகவல்:
செ. அமிர்தலிங்கம்
[12993]

# இந்தியப் பிரசைகள் பிரச்சினை; முத்தரப்பு பேச்சு நடத்த வேண்டும்

## அமைச்சர் தொண்டமான் வலியுறுத்து

கொழும்பு, மே 4

இலங்கையில் உள்ள ஒரு லட்சம் இந்தியப் பிரசைகளை தாயகம் திருப்பி அனுப்புவது குறித்து முத்தரப்பு பேச்சுக் கள் நடத்தப்பட வேண்டும்.

இப்பேச்சுக்களில் இலங்கை, இந்திய அரசுகளும் இ. தொ. காவும் கலந்துகொள்ள வேண் டும் என்று அமைச்சரும் இ. தொ. கா. தலைவருமான திரு. எஸ். தொண்டமான் தெரிவித்தார்.

அதற்கு முதல், இந்தியப் பிரசைகளைத் தாயகம் திருப்பி அனுப்புவது தொடர் பாக எதுவித நடவடிக்கையும் மேற்கொள்வது அவசியமற்ற தாகும் என்றும் அமைச்சர் சொன்னார்.

அமைச்சர் மேலும் சொன் னதாவது:

சம்பந்தப்பட்ட இந்தியப் பிரசைகள் தாம் விரும்பியபடி முடிவு எடுக்க முடியும். கட் டாயப்படுத்தி அனுப்ப முடி யாது.

அமைச்சர் ரஞ்சன் விஜே ரத்னாவின் அறிவிப்பு அம்மக் களை பலாத்காரமாக வெளி யேற்றும் முயற்சி என்று பல மலையக ஜனநாயக அமைப் புக்கள் கண்டித்துள்ளன.

இது தொடர்பாக நாம் ஜனாதிபதியுடன் பேச்சுக் களை நடத்த உள்ளோம் — என்று அமைச்சர் தொண்ட மான் சொன்னார். (ஒ-எ)

வடக்கு - கிழக்கு

# மாகாண சபை உறுப்பினர் சென்னை மத்திய சிறையில்!

சென்னை, மே 4

பாஸ்போர்ட் சட்டத்தை மீறியதாகக் குற்றஞ் சாட் டப்பட்ட இலங்கை வடக்கு-கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர் ஒருவர் சென்னை மத்திய சிறையில் விளக்கமறி யலில் வைக்கப்பட்டார்.

இதே குற்றத்துக்காக கைது செய்யப்பட்ட 110 ஈ. பி. ஆர். எல். எவ். உறுப் பினர்களில் இவரும் ஒருவர் என்றும் இவர் 15 நாள் விளக்கமறியலில் வைக்கப்பட் டிருக்கிறார் என்றும் தெரிய வருகிறது.

ஒரிஸ்ஸா அகதி முகாம்க ளில் இருந்து தப்பி வந்த சுமார் 300 தமிழ் அகதிக ளில் கைது செய்யப்பட்ட மாகாண சபை உறுப்பினர் குடும்பமும் உள்ளது.

இந்த உறுப்பினரின் மனைவி புஷ்பா சுதாகர் (22 வயது) சொன்னதாவது:

இலங்கையில் எம்மால் தங் கியிருக்க முடியவில்லை. ஆகவே அங்கு இருந்து புறப் பட்டோம். ஆனால் எம்மை ஒரிஸ்ஸாவுக்கு அனுப்பி விட் டார்கள்.

அங்கு தங்கியிருக்க முடி யாத நிலையில் சென்னை வந்தோம்.

இங்கு வந்தவுடன் எனது கணவரைப் பிடித்து சிறையில் தள்ளி விட்டனர். அவர் என்ன குற்றத்தைச் செய்து விட்டார்? அகதிகளை பொலீ ஸார் ஏன் கைது செய்கிறார் கள்?

எம்மை மண்டபம் அகதி முகாமில் தங்க தமிழ் நாடு அரசு அனுமதிக்க வேண்டும்- என்றார் அவர். [ஒ-எ]

# அடையாள அட்டைகள் புதிதாக வழங்கப்படும்

## 1972, 73 இல் பெற்றவர்களுக்கு

கொழும்பு, மே 4

1972, 1973 ஆம் ஆண்டுக ளில் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகளுக்குப் பதிலாக புதிய கார்ட்டுகளை வழங்க அமைச்சரவை தீர்மா னித்துள்ளது.

ஏறத்தாழ 5 லட்சம் பேர் இந்தக் காலகட்டத்தில் அடை யாள அட்டைகளைப் பெற்று உள்ளனர்.

புதிய அடையாள அட்டை கள் தொடர்பாக ஆட் பதி வுத் திணைக்கள ஆணையா ளர் பொது மக்களுக்கு மிக விரைவில் அறிவித்தல் ஒன்றை விடுக்க இருக்கிறார்.

இத் தகவலை அமைச்சர வைப் பேச்சாளர் திரு. ரஞ் சன் விஜேரத்னா நேற்றுச் செய்தியாளர்களிடம் தெரி வித்தார். (ஒ-எ)

# பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 4

நாளை நடைபெறவிருந்த இரண்டாம்ஆண்டு விஞ்ஞான பீட பரீட்சைகள் பின்போடப் பட்டுள்ளன.

இப்பரீட்சைகள் இம்மாதம் 8 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நடைபெறுமென யாழ் பல்கலைக்கழக பரீட் சைப் பகுதிப் பதிவாளர் திருமதி. எம். பாலகிருஷ்ணர் அறிவித்துள்ளார். (உ-7)

# சிமெந்துஊழியர் மெய்வல்லுநர் போட்டி!

யாழ்ப்பாணம், மே 4

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையின் மெய்வல் லுநர் போட்டிகள் இன்றும் நாளையும் காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இன்று நடைபெறும் தொழிற்சாலை ஊழியர்க ளின் பிள்ளைகளுக்கான போட்டிக்கு பிரதம விருந்தி னராக தொழிற்சாலை நிர் வாக முகாமையாளர் திரு. வி. ரி. சிவலிங்கமும் அவரது பாரியாரும் கலந்துகொள்வர்.

நாளை நடைபெறும் ஊழி யர்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகளுக்கு தொழிற் சாலை முகாமையாளர் திரு. எஸ். ஞானபண்டிதனும் அவ ரது பாரியாரும் கலந்துகொள் வர். (உ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப் பாணம். நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத் தில் 04 - 05 - 1990 இல் அச் சிட்டு வெளியிடப்பட்டது.

# டில்லி தீ விபத்துக்களின் பின்னணியில் விஷம சக்தி

## லோக சபையில் குற்றச்சாட்டு

புதுடில்லி நகரில் தினமும் இடம்பெற்று வரும் தீவிபத்து சம்பவங்களின் பின்னணியில் விஷம சக்திகள் இருப்பதாக நேற்று இந்திய லோக சபை யில் உறுப்பினர்கள் குற்றஞ் சாட்டினர்.

இது குறித்து மத்திய அரசு பூரண விசாரணை நடத்த வேண்டும் என்று அவர்கள் கோரினர்.

நேற்றும் புதுடில்லி நகரின் ஒரு பகுதியில் தீ விபத்து ஏற் பட்டு, குடிசைகள் பல எரிந் தன என்று அறிவிக்கப்பட் டது. (ஒ-எ)

# கொழும்பில் இஸ்லாமிய மாநாடு

கொழும்பு, மே 4

நவீன சவால்களுக்கு எதி ரான இஸ்லாமிய தக்வா என்னும் பொருளில் தென் கிழக்காசிய நாடுகளின் இரண் டாவது பிராந்திய மாநாடு இலங்கையில் நடைபெறவுள் ளது.

இஸ்ரவேல் நலன் பிரிவு இலங்கையில் மூடப்பட்டதன் பின் இம்மாநாட்டை முதல் தடவையாக இங்கு நடத்துவ தென தீர்மானிக்கப்பட்டிருக் கிறது.

எதிர்வரும் மே மாதம் 23 ஆம் திகதி பண்டாரநாய க்கா சர்வதேச மகாநாடு மண்டபத்தில் நடைபெற வுள்ள இம்மாநாட்டை ஜனாதிபதிஆர். பிரேமதாஸா ஆரம்பித்து வைப்பார்.

இம்மூன்று நாள் மகாநாட் டுடன் நான்கு நாட்களுக் கான பயிற்சிக் கருத்தரங்கை லிபியாவின் திருப்பொலியில் அமைந்திருக்கும் உலக இஸ் லாமிய அழைப்புச் சங்கம் ஏற்பாடு செய்கிறது.

இச்சங்கத்தின் செயலாளர் நாயகம் டாக்டர்மொஹமட் அஹமட் ஷரீப் தலைமையில் லிபியாவின் உயர்பிரதிநிதி களும் இலங்கை மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர். இம்மகாநாட்டு ஏற்பாடு களை உலக இஸ்லாமிய அழைப்பு சங்கத்தின் கொழும்புப் பிரதிநிதி ஜனாப் முப்தா ஆகா இலங்கை முஸ் லிம் இளைஞர்கள் சங்கங்க ளின் சம்மேளனத்தின் உத வியனுசரணையுடன் மேற் கொண்டு வருகிறார். (இ-2)

# சுதந்திரக் கட்சி அமைப்புக் குழு

கொழும்பு, மே 4

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் பங்கு பற்றுவதற்கான பூர்வாங்க அலுவல்களை மேற்கொள்வ தற்கென்று சுதந்திரக் கட்சி அமைப்புக் குழு ஒன்றை நிய மித்துள்ளது.

வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காக தேசிய நிய மனசபை ஒன்றையும் கட்சி யின் மத்திய செயற் குழு நியமித்துள்ளது. (ஒ-எ)

# வாழ்க்கைசெலவு புள்ளி 977.6

கொழும்பு, மே 4

கடந்த ஏப்ரல் மாதத்திற் கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி 977.6 ஆகும் என்று புள்ளிவிவர குடிசன மதிப் பீட்டுத் திணைக்களம் அறி வித்துள்ளது. (ஒ-எ)



சுன்னாகம் சிவன்சிறுவர் பாடசாலை I வது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட உடுவில் உதவி அரசாங்க அதிபரும், சுன்னாகம் பிரதேச சபையின் விசேட ஆணையாளருமாகிய திரு. ஆ. மகாலிங்கம் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம் பித்து வைத்த போது எடுக்கப்பட்ட படம். அருகில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சுன்னாகம் பிரதம தாபால் அதிபர் இ. திருநாவுக்கரசு காணப்படுகிறார். (ஒ)

வடக்கு - கிழக்கில்

# பத்திரிகைத் துறையை ஊக்குவிக்க முயற்சி!

யாழ்ப்பாணம், மே 4

வடக்கு- கிழக்கில் பத்திரி கைத்துறையை ஊக்குவிக்க பாரிய திட்டம் ஒன்று செயற் படுத்தப்படும்.

இந்தத் தகவலை விடுத லைப் புலிகள் மக்கள் முன் னணியின் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்தி ரராஜா (மாத்தயா) நேற்று வெளியிட்டார்.

பத்திரிகைத் துறை சார்ந்த ஊழியர்களை அவர் நேற்றுச் சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பு கோண்டாவிலில் உள்ள முன்னணியின் மாவட் டத் தலைமைச் செயலகத் தில் இடம்பெற்றது. முன்ன ணியின் அமைப்பாளர் திரு. இ. இராஜனும் இந்தச் சந் திப்பில் கலந்து கொண்டார்.

வடக்கு, கிழக்கு பத்திரி கைத்துறையை சர்வதேச ரீதி யில் தரம் மிக்கதாக உயர்த்த தகுந்த முயற்சிகள் எடுக்கப்படும் என்றும் -

பத்திரிகைத் துறை சார்ந்த தொழில் நுட்பம் மற்றும் பணிகளில் உயர்ந்த நுணுக் கங்களைப் புகுத்தக் கூடிய தாக பயிற்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படும் என்றும் கலந்துரையாடலில் தெரிவிக் கப்பட்டது. [உ]

சட்டசபையில் இருந்து

# அ. தி. மு. கவினர் நேற்று வெளியேற்றப்பட்டனர்!

சென்னை, மே 4

தமிழ்நாடு சட்டசபையில் இருந்து அ. தி. மு. கவினர் வலுக்கட்டாயமாக நேற்று வெளியேற்றப்பட்டனர். இதனை அடுத்து காங்கிரஸ் கட்சியினரும் வெளிநடப்புச் செய்தனர்.

சட்டசபையில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுரை ஒன்றில் குறிப்பிட்ட பகுதி ஒன்றை நீக்க வேண்டும் என்று கோரி அ. தி. மு. க. வினர் ஆட்சேபம் செய்ததை அடுத்தே அவர்கள் ஒரு கட் டத்தில் வெளியேற்றப்பட் டனர்.

இதேவேளை இந்த ஆய்வு ரையின் பிறிதொரு பகுதியை ஆட்சேபித்து இந்திரா காங் கிரஸ் கட்சியினரும் வெளி நடப்புச் செய்தனர். (ஒ-9)

# அசிட் வீச்சு!

கொழும்பு, மே 4

கொழும்பு மாநகர சபை உறுப்பினர் பெர்னார்ட் பெரேரா அசிட் திராவக வீச்சுக்கு இலக்கானார்.

கடந்த திங்கட்கிழமை வெள்ளவத்தையில் மறைந்து இருந்த இருவர் இந்த உறுப் பினர் மீது இத்தாக்குதலை நடத்திவிட்டு யோட்டார் சைக்கிளில் ஏறி மறைந்து விட்டனராம்.

உறுப்பினர் பலத்த எரி காயங்களுக்கு இலக்கானார். (ஒ-எ)

## மரண அறிவித்தல்

### இளையதம்பி குருநாதன்

யாழ்ப்பாணம் கோவில் வீதியைச் சேர்ந்த இளைப் பாறிய ரயில் நிலைய அதிபர் இளையதம்பி குருநாதன் கடந்த 01-05-1990 செவ்வாய்க்கிழமை இரவு கால மானார்.

அன்னார் றோசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற விவேகானந்தன், திருமதி சகுந்தலா இராமச்சந்திரன் (டுபாய்), திருமதி அருந்ததி இராஜ் சந்திரன் (அவுஸ்திரேலியா), செல்வி மேனகா (யாழ். பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. மு. இராமச்சந்திரன் (டுபாய்), திரு. மு. இராஜ்சந்திரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மாம னாரும், செல்விகள் கவிதா, சங்கீதா, வாமினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

ஈமக்கிரியைகள் 05-05-1990 சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண் பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
மு. இராமச்சந்திரன்
37, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். [12995]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org